தனிப்பிரதி விலை அணா 0—1—6
Reg. No. M. 3086. 1936-செப்டம்பர் 1.
PAHUTHARIVU ("REASON")
மலர் 2. இதழ் 5.

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த மாத வெளியீடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களைச் சேர்த்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும்போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்

அதிசயம் (பாட்டு) (மு. அண்ணால் தங்கோ) 1
ஆதாரமற்ற நம்பிக்கைகள் 3
நாம் எதை நம்பலாம்? 9
ஆகமத்தின் புரட்டு (பண்டிதர் அ. கிருஷ்ணசாமி) 14
சார்லஸ்டார்வின் வாழ்க்கை வரலாறு (ஈ. லாரென்ட்) 19
பொதுவுடைமையும் மதமும் (ம. சிங்காரவேலு) 25
மெய்யாகவே ஒரு கடவுளுண்டா? (எம். ஜே. காவின்) 31
இங்கர்சாலும் சமதர்மமும் (சௌ. ரா.) 35
ஆகாரத்திலும், உடையிலுங்கூட மதமா? (கைவல்யசாமியார்) 44
உயிர் வாழ்விற்கு லக்ஷியமுண்டா? 51
ருஷ்யா எப்படி விடுதலையடைந்தது? 57
ஜந்துக்களின் வேகம் 61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 2. ஈரோடு 1936 செப்டம்பர் 1. இதழ் 5.

அதிசயம்.

(குடியேற்றம்—மு. அண்ணல்தங்கோ.)

"பாதுகையே பாதுகையே" எ. இ. பா.

பல்லவி.

1. அதிசயமே! அதிசயமே!
ஆரியர் திராவிடரை யடக்கியாள்வது பெரும்
(அதிசயமே)

அனுபல்லவி.

2. கதியொன்று மின்றியிங்கு பிழைக்க வந்தோர்கள்!
காரியக் கர்த்தர்களாய் அமர்ந்து கொண்டார்கள்!
(அதிசயமே)

சரணம்.

3. "மதம், பக்தி யாகம் கோயில் தெய்வங்கள்" காட்டி
மக்கள் முன்னேற விடா மடமையிலாட்டி
"இதந்தரும் சொர்க்கம் மோட்சம்" என நஞ்சையூட்டி
ஏமாற்றும் இக்கதைகள் ஆரியர் சூழ்ச்சி! (அதிசயமே)

4. மத்திய ஆசியா விலிருந்து வந்தோர்கள்!
மக்களெல்லா மொன்றென்னும் மதியே இல்லார்கள்
"புத்தி தமக்கே" யென்றும் பறையடிப்பார்கள்!
"பூதேவர் தாங்க" ளென்று உள்நுழைந்தார்கள்!
(அதிசயமே)

5. பன்னெடு நாட்களாய் பாரதநாடு
படுத்துய நரியரால் பரவியகேடு!
மன்னர் தமிழரெல்லாம் மறுத்திட்டபோது
"மனுஸ்மிருதி" "வேத"மென்று போட்டனர் சூடு!
(அதிசயமே)

6. கையினில் யாதொரு ஆயுதமின்றி!
சமறு நாலாவித படையுமொன்றின்றி!
"ஐய"ரென்றே தர்ப்பைப் புல்தனைக் கொண்டு!
ஆரியர் தமிழரை ஆள்வது! இன்று! (அதிசயமே)

7. கோடி கோடியாய் நம் செல்வமும் போச்சு!
கோழைகளாய் நாம் "வாழ்"வு மாச்சு!
ஆடம்பரப் பார்ப்பன மாக்களைப் போற்றி
அடிமையாய் "வாழ்வது" மிகமிகத்தாழ்ச்சி! (அதிசயமே)

8. கோயில் கடவுள் பேரால் பொருள்களை இழந்தோம்!
குழந்தைகளுக்குக் கல்வி கொடுப்பதை மறந்தோம்!
ஆய்ந்து பாராமலே நம்முடன் பிறந்த!
ஆருயிர்த் தமிழரை! தீண்டாமற் பிரிந்தோம்! (அதிசயமே)

9. நெற்றிக்கண்ணைக் காட்டினுங் குற்றமென்றுரைத்த!
நேர்மைத் தமிழர்! வீரர்! வழிவழி வந்தோம்!
முற்றுமாரியர் கொள்கை புளுகென எதிர்த்த!
மூதறிஞன்! ராவணன்! ஆண்மையை மறந்தோம்
(அதிசயமே)

10. கொல்லா நோன்புடைத் தமிழரைச்! சமணரை
கொலைபுரிந் "தாக்க"ரென் றேசவு மிசைந்தோம்!
"நல்லவர் நற்சூத்திரர் தாசர் தர்மப்ர"பென்று
நவில்வதில் சொக்கிநின்று அறிவையுமிழந்தோம்!
(அதிசயமே)

ஆதாரமற்ற நம்பிக்கைகள்.

ஒரு விஷயத்தை ஒருவன் கூறுகிறான் என்று வைத்துக் கொள்வோம். உடனே நாம் என்ன செய்கிறோம்.

"அது உனக்கு எப்படித்தெரியும்? அது உண்மையென்று நாங்கள் ஏன் நம்பவேண்டும்? அது உண்மை என்று நம்ப ஆதாரமென்ன?" எனப் பொதுவாக மூன்று கேள்விகளைக் கேட்கிறோம்.

பிரதிதினமும் நாம் எத்தனையோ விஷயங்களை அறிகிறோம். அவைகளில் பலவற்றை நாம் கண்ணைமூடிக் கொண்டு நம்பிவிடுகிறோம். "அது உண்மையா? உண்மை யென்பதற்கு ஆதாரமென்ன?" என்பன போன்ற விஷயங் கலை நாம் கவனிப்பதே இல்லை.

நமது நம்பிக்கைகளில் பலவற்றை ஆராய்ந்து பார்த் தால் அவற்றிற்கு ஆதாரமே இல்லையெனத் தோன்றா நிற் கும். ஒரு காலத்திலே ஒரு விஷயம் உண்மையென்று யாரோ ஒருவர் சொன்னார், அல்லது ஆராய்ந்து பாராமலே அதை நாம் உண்மையென நம்பிக்கொண்டோம். அல்லது அது உண்மையாகத்தான் இருக்குமென்று கனவில் நம்பிக்கொண் டோம்.

ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் நாம் முதலிலே கூறிய மூன்று கேள்விகளையும் கேட்டால் எந்த விஷயத்தின் உண் மையையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

உண்மையாராய்ச்சியில் தோல்வியடைந்த பிறகும் ஒரு விஷயத்தை நாம் உண்மையென நம்புவோமானால் அந்த நம்பிக்கை பகுத்தறிவுக்குப் பொருந்தாததென்றே ஏற்படும்.

* * *

யாரேனும் ஒருவரது இலேசான தூண்டுதலின் பேரில் முதலில் ஒரு விஷயத்தை உண்மையென நம்புகிறோம். அந்த நம்பிக்கை காலக்கிரமத்தில் வலுப்பெற்று விடுகிறது. இப்

பொழுது அது நமது சர்வ சாதாரண நம்பிக்கைகளில் ஒன்றாகிவிட்டது. யாரோ ஒருவர், ஏதோ ஒரு இடத்தில், எப்பொழுதோ ஒரு காலத்து ஒரு விஷயத்தை நம்மிடம் சொன்னார். அதை ஆராய்ந்து பாராமலே நாம் ஒப்புக்கொண்டு நம்பிவிட்டோம். நம்மிடம் கூறப்படுகிறவைகளைப்பற்றிக் கேள்வி கேட்கும் சக்தி நமக்குண்டாகாதிருந்த இளம் பருவத்திலேயே அந்த விஷயத்தை நாம் கேட்டிருக்கலாம். நமது உறுதியான நம்பிக்கைகளில் பல அப்பொழுது ஏற்பட்டவைகளாகும். நாம் பக்குவ தசையடைந்திருக்கும் இப்பொழுது அது உண்மையா அல்லவா என்று கேட்கக்கூட நாம் துணிவு கொள்வதில்லை. அது தெளிவான உண்மையென்றே நமக்குத் தோன்றுகிறது. எனவே அதைப்பற்றிக் கேள்வி கேட்பதே பைத்தியக்காரத்தனம் என நாம் உணருகிறோம்.

ஒரு தீவிர வைஷ்ணவனையும், ஒரு தீவிர சைவனையும் இள வயதிலேயே இடம் மாற்றி வளர்த்தால்—அதாவது தீவிர வைஷ்ணவனை தீவிர சைவப் பெற்றோரும், தீவிர சைவனை தீவிர வைஷ்ணவப் பெற்றோரும் இளமை முதற்கொண்டே வளர்க்கும்படி செய்தால் அவர்களது பழக்க வழக்க நம்பிக்கைகள் எல்லாம் நேர்மாறாகவே அமையும். அவர்களில் ஒவ்வொருவனும் தனது நம்பிக்கையே—பழக்க வழக்கமே மெய்யென்று நம்புவான். சமயத் துறையில் மட்டுமன்றி இதர துறைகளிலும் இதே நிலைமையே ஏற்படும். பல தார மணம், சிசுஹத்தி, நரபலி, மாட்டுச் சண்டை, குத்துச் சண்டை, கோழிப் போர் முதலியவைகள் அமலில் இருக்கும் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு அவை தீயவை என்றே தோன்றா; சர்வ சாதாரணப் பழக்க வழக்கமாகவே தோன்றும். அவை அசாதாரணமான பழக்கங்கள் என்றோ ஒழுக்கத்துக்கு முரணான பழக்கங்கள் என்றோ தோன்றமாட்டா.

குற்றபரம்பரையினர் வாழும் நகரத்தின் ஒரு பகுதியிலே குற்றபரம்பரையினர்க்கு இடையிலே, ஒருவர் வளர்ந்துவந்தால் அவருடைய பழக்கவழக்கங்கள் ஏனையோர் பழக்கவழக்கங்களுக்கு மாறுபட்டனவாகவே இருக்கும். ஒரு ஆங்கிலப் பெண்ணை ஒரு ரஷ்ய மாது ஸ்வீகாரம் செய்து ரஷ்ய குடும்பத்தில் ரஷ்ய பழக்க வழக்கப்படி வளர்த்தால், அவளுடைய பழக்க வழக்கங்களும் உணர்ச்சியும் ரஷ்ய போக்காக இருக்குமே ஒழிய, ஆங்கிலப்போக்காக இராது. இது

போலவே நமது அநேக அதிதீவிர நம்பிக்கைகளுக்குக்கூட நமது வளர்ப்பு முறையேகாரணமாகும்.

இளமைப்பருவம் கடப்பதுடன் புதுக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் குணமும் உண்மையில் நின்றுவிடுவதில்லை. நம்மையறியாமலே நமது வாழ்நாள் முழுதும் புதுப்புதுக்கருத்துக்களை பிரதிதினமும் ஏற்றுக்கொண்டே இருக்கிறோம். இதற்கு பத்திரிகைகளும் விளம்பரங்களுமே காரணம். பொதுவாக அநேக விஷயங்களைப்பற்றி நுட்பமாகச் சிந்தனை செய்வதே இல்லை. நாம் பெரிதும் கிளிகள் மாதிரியே நடந்து வருகிறோம். பிறர் சொல்வதை நம்புகிறோம்; செய்வதைப் பின்பற்றுகிறோம். இளமைப்பருவம் கடந்தபிறகும் நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் கருத்துகளுக்குப் பொருத்தமான கருத்துகளைத்தான் ஒப்புக்கொள்கிறோம்; மற்றவைகளை நிராகரிக்கிறோம்.

''எல்லாரும் அப்படியே சொல்கிறார்கள், அதனால் நம்புகிறோம்'' என்ற ரகத்தைச் சேர்ந்தவைகளுக்கு ஒரு தனியிடம் வகுக்கவேண்டியதுதான். அவை தெளிவான உண்மைகள் ஆகமாட்டா. அப்பேர்ப்பட்ட விஷயங்கள் ஒரு குறிப்பிட்ட தனிமனிதன் கூறியவைகளாயிருக்கமாட்டா. அவை யாரோ ஒருவராலோ பலராலோ கூறப்பட்டு பரம்பரையாய் நம்பப்பட்டு வந்தவைகளாக இருக்கலாம். அல்லது மக்களின் ஐதிக நம்பிக்கைகளாகவும் இருக்கலாம். அப்படியானால் அவை வார்சுரிமைப்படி நாம் பெற்ற சமூக (சொத்து) நம்பிக்கைகளாகும். எனவே ஒரு நம்பிக்கை மிகவும் பழமையானது என்ற ஒரே காரணத்தினால் மட்டும் அது ஆதாரமுடைய உண்மையாகி விடமாட்டாது.

சந்தேகத்துக்கு இடமில்லாதபடி, வெளிப்பார்வைக்கு உண்மையாகத்தோன்றுபவைகள் விஷயத்தில் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

''ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதே ஆபாசமானது, அநாவசியமானது—துரோகமானது என்ற உணர்ச்சி மக்களுக்கு இருக்குமானால் அந்த விஷயம் பகுத்தறிவுக்கு முரணானது என்று தான் ஏற்படும்'' டிராட்டர்.

''அது தெளிவான பொது உண்மை. அதைப்பற்றி சந்தேகம் கொள்வதோ ஆராய்ச்சி செய்வதோ அநாவசியம்''

என ஏற்படுமானால், மக்கள் அறிவு வளர்ச்சியின் சரிதம் முழுவதிலும் அப்பேர்ப்பட்ட தெளிவான பொது உண்மை களே நிறைந்திருக்கின்றன. ஆராய்ச்சியில் அவை ஆதார மற்றவை என்றும் வெளியாகியிருக்கின்றன. உதாரணமாக அடிமை வர்த்தகம் இயற்கையானது, நியாயமானது, இன்றிய மையாதது என்றே வெகுகாலமாக நம்பப்பட்டு வந்தது. மக்க ளில் பல வகுப்பார் இயல்பாக அடிமைகளாகவே இருந்து வருகின்றனர். அடிமை வாழ்க்கையையே பெரிதும் விரும்பு கின்றனர். அதைப்பற்றி சந்தேகங்கொள்ளவே இடமில்லை.

மற்றும் வட்டமாக அன்றி இதர முறைகளில் கிரகங்கள் சுற்றுகின்றன என்று நம்புவது வெகுகாலமாக அசாத்திய மாகவே இருந்து வந்தது. வட்டவடிவம் அல்லது மண்டலம் மேற்பார்வைக்கு ஒரு பூரணமான உருவம்; எனவே கிரகங் கள் எல்லாம் வட்டமாகச் சுற்றுகின்றன என நம்புவதே இயற்கையானது; சாத்தியமானது. ஆனால் இந்த நம்பிக்கையை ஒழிக்க அநாதிகாலமாக நடந்து வந்திருக்கும் போராட்டம் சரித்திரத்திலேயே மிகவும் அற்புதமானதா கும்.

உணர்ச்சிக்கு ஹிருதயமே ஆதாரமென்றும் மூளை அல் லவென்றும் முன்னோர் நம்பி வந்தனர். இன்றோ பெரும் பாலோர் மூளையின் உதவியினால் நாம் சிந்தனைசெய்வதாகவே நம்புகிறார்கள். மூளையின் உதவியின்றி மனிதனுக்கு சிந்தி க்கவே முடியாதென்றே தற்காலத்தவர்களில் பெரும் பாலோர் கூறுகிறார்கள். எனினும் முன்னோர்கள் மாறாகவே நம்பினார்கள்.

பூமி பரப்பானதென்பது தெளிவான உண்மையாகத் தோ ன்றியதினால் வேறு விதமாக அபிப்பிராயப்படுகிறவர்கள் கேலி செய்யப்பட்டார்கள்—தூற்றப்பட்டார்கள்.

பளுவான பொருள்கள் இலேசான பொருள்களை விட விரைவாக விழுமென இரண்டாயிர வருஷகாலம் தடையி ன்றி நம்பப்பட்டு வந்தது. அதற்கு அரிஸ்டாட்டல் அபிப்பி ராயமும் மேற்கோளாகக் காட்டப்பட்டது. உண்மை வேறு விதமானதென்று காலிலியோ நிரூபித்துக்காட்டும் வரை மக் கள் அவ்வாறே நம்பி வந்தனர். ஆராய்ந்து பாராமல் கண் மூடித்தனமாக நம்பப்படுபவைகள் எல்லாம் ஆதாரமுடைய உண்மைகளாகிவிட மாட்டா. அத்தகைய தப்பு நம்பிக்கை

களை உடைத்தெறிவதினாலேயே அறிவு வளர்ச்சி யடைகிறது.

* * *

சுய நலப்பற்றினால் பல நம்பிக்கைகள் அமலில் இருந்து வருகின்றன. தற்கால மனோ தத்துவ சாஸ்திரப்படி பார்த்தால் இவ்விஷயத்தில் சந்தேகத்துக்கே இடமில்லை. சில விஷயங்களை நம்புவது நமக்கு இலாபகரமாயிருப்பதினாலேயே அவைகளை நாம் நம்பி வருகிறோம். பொதுஜன மதிப்பைப் பெறுவதற்காகவும் நாம்பல விஷயங்களை நம்புகிறோம்; அல்லது நம்புவதாக பாவனை செய்கிறோம். ஆனால் அரசியல் அபிப்பிராயங்கள் உட்பட சகல அபிப்பிராயங்களும் சுயநலம் பற்றியவை என்றும் கூறிவிட முடியாது. எனினும் நம்பிக்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் சுயநலமும் ஒரு காரணம் என்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

"சுயநலம்" என்பது பொதுவாக, மக்களது ஜீவனோபாயத்துக்குரிய வழிகள், பணம் தேடுதல் முதலியவைகளையே குறிக்கும். ஆனால் சமூக வாழ்வில் ஒருவனுக்கு ஏற்படும் நலத்தையும் நாம் சுயநலத்தோடு சேர்க்கலாம். பொதுஜன மதிப்பைப் பெறும் பொருட்டும் நாம் பலவிஷயங்களை நம்புவதாக அல்லது பாவனை காட்டுவதாக ஏற்கனவே கூறியிருக்கிறோம். இதுவும் சுயநலம் பற்றியதாகும். ஒருவனது வாழ்நாளின் வெற்றியே பொதுஜன மதிப்பைப் பொறுத்திருக்கிறது. சில ஸ்தாபனங்களையோ இயக்கங்களையோ ஆதரிப்பதினாலோ நடத்துவதினாலோ சிலருக்கு பொதுஜன மதிப்பும் வாழ்க்கை வெற்றியும் ஏற்படுகிறது. சமூக வாழ்வில் தாம் பெற்றிருக்கும் ஸ்தானம் அல்லது பதவிகள் காரணமாக சிலர் அனேக விஷயங்களை நம்ப வேண்டியதாக ஏற்படுகிறது. அவ்வாறு நம்பவில்லையானால் அவர்களுடைய மதிப்பும் ஒழிந்துபோகும்; வாழ்வும் கஷ்டமாகிவிடும்.

தனது இயல்பான குணத்துக்கு ஆதாரம் தேடும் பொருட்டும், தனது நிலைமையைக் காப்பாற்றும் பொருட்டும், தனது நடக்கை நியாயமென நிரூபிக்கும் பொருட்டும் சிலர் வேண்டுமென்றே சில விஷயங்களை அல்லது கொள்கைகளை நம்புகிறார்கள், அல்லது நம்பும்படிஏற்படுகிறது. சோம்பேறிகளும் பித்தலாட்டக்காரரும் கூட தமக்கு ஆதரவாக சில அபிப்பிராயங்களையோ கொள்கைகளையோ காட்டக்கூடும்.

மேது உபதேசிகளிலும் பிரசாரகர்களிலும் பெரும்பாலர் வாலிழந்த நரிக்கு ஒப்பானவர்களே.

வீண் அபிமானம் காரணமாகவும் பலர், ஆதாரமற்றவை களை உண்மையென நம்புவதுண்டு. ஆனையோ, சம்பவத்தை யோ, ஸ்தாபனத்தையோ பற்றிய அபிமானத்தினாலும் துவே ஷத்தினாலும் ஆதாரமற்றவைகளைப் பலர் மெய்யென நம்பு வதுண்டு. சிறுவயதில் பெற்றோருக்கு அடங்கி நடக்காத பிள்ளைகள் பெற்றோர் அபிப்பிராயங்களுக்கு அல்லது நம்பி க்கைகளுக்கு முரணாகவே நடந்து வருகிறார்கள். அதுபோ லவே பெற்றோரை நேசிக்கும் பிள்ளைகள் அவர்களது தப்ப பிப்பிராயங்களையும் ஆதரிக்கின்றன, நம்புகின்றன.

வயதுவந்த பிறகு கொடிய பிணக்கினால் சிலருடைய அபிப்பிராயங்கள் மாறுபடுவதுண்டு. ஒருவன்மேபரிலுள்ள பகை அவனது அபிப்பிராயங்களையும் பாதிக்கிறது. நம் எதிரிகளின் அபிப்பிராயங்களைத் தகர்த்தெறிவதில் நாம் பெரிய மகிழ்ச்சி கொள்வதில்லையா? அதுபோலவே ஒருவன் மீதுள்ள நட்பினாலும் அவனது அபிப்பிராயங்களை ஆத ரிப்பதில் நாம் பெரிய மகிழ்ச்சியடைகிறோம்.

* * *

சிலர் காலப்போக்கையொட்டி சில அபிப்பிராயங்களை யும் நம்பிக்கைகளையும் ஆதரிப்பதுண்டு. ஆனால் காலப் போக்கு மாறுந்தோறும் நாம் அபிப்பிராயங்களை பொது வாக மாற்றிக்கொள்வதில்லை. வெகு சீக்கிரத்தில் நமது மனோ நிலை உறுதியடைந்து விடுகிறது.

ஒரு அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு விட்டால் அது அப்படியே நிலைத்து வருவதே சகஜமாக இருக்கிறது. ஒவ் வொருவரும் ஒரு குறிப்பிட்ட முறையில் சிந்தனை செய்வ தினால் அம்மாதிரி செய்வதே சுலுவாகத் தோற்றுகிறது.

சிலர் கதைசொல்வதில் நிபுணர்களாயிருக்கிறார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட அபிப்பிராயங்களை அல்லது வாதங் களை விளக்குவதில் சமர்த்தர்களாயிருக்கிறார்கள். "கிராம போன்" மாதிரி வேலைசெய்யும் பல புருஷர்களும் பெண்க ளும் இருக்கிறார்கள். அவர்கள் பழங்கதைகளைத் திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டே இருப்பார்கள். ஏதாவது ஒரு விஷயத்தைக் கிளப்பி விட்டால் போதுமானது. அவர்கள்

நாம் எதை நம்பலாம்?

எக்காரணத்தால்?

தெளிவாகச் சிந்தனை செய்து பழகவேண்டியவர்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதாவது

"நீ அதை உண்மையென நம்பக்காரணமென்ன?

அல்லது

நான் அதை உண்மையென நம்புவதற்கு ஆதாரமென்ன?" என்பதே.

பெரும்பாலோர் கொண்டிருக்கும் பெரும்பான்மையான அபிப்பிராயங்களுக்கு எத்தகைய ஆதாரமும் இல்லை என்பதை நாம் முக்கியமாக உணரவேண்டும். அவர்கள் அவைகளை ஏன் நம்புகிறார்கள் என்பதற்குக்காரணமே இல்லை; அவர்களுடைய அபிப்பிராயங்கள் சரியென நிரூபிக்க அவர்களுக்கு ஆதாரமும் காட்ட முடியாது. "நீங்கள் அவ்வாறு ஏன் எண்ணுகிறீர்கள், அல்லது அவைகளை நம்புவதற்குக் காரணம் என்ன?" எனக்கேட்டால் அவர்களுக்கு விடையளிக்க முடியாது. அவ்வாறு கேட்டால் அவர்கள் திகைப்படைவார்கள். அம்மட்டோ? அம்மாதிரிக்கேள்வி

அதைப்பற்றி மூச்சு விடாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள்.

பொதுவாக எல்லா நம்பிக்கைகளும் அபிப்பிராயங்களும் அப்பேர்ப்பட்டவைகளே. சில காலங்களுக்குப் பிறகு அவை நமது உள்ளத்து உறைந்துவிடுகின்றன. இளமையாயிருக்கும் போது பழைய கருத்துகளைமாற்றிப்புதுப்புதுக்கருத்துகளை சம்பாதித்துக்கொள்கிறோம். வயது முதிர முதிர புதுக்கருத்துகளை நாம் அவ்வளவாக நாடுவதில்லை. நாம் பழமைக் களஞ்சியமாகி விடுகிறோம்.

கள் கேட்பதைப் பெரிய தொந்தரவாகவும் எண்ணுவார்கள். அல்லது மிகப் பிரயாசைப்பட்டு ஏதாவது ஒரு மாதிரிக் காரணங்களைக் கூறுவார்கள். ஆனால் அவை பகுத்தறிவுக்கு முரணானவை என்பதை நீங்கள் வெகு சுளுவில் அறிந்துகொள்வீர்கள்.

ஆதாரமில்லாமலும் ஆராய்ந்து பாராமலும் மக்கள் பல விஷயங்களைச் சுளுவாக நம்பி விடுவதைப்பற்றி ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். ஆராய்ச்சி யுணர்ச்சியில்லாதவர்களும் சோம்பேறிகளும் சுயமாக ஒரு பொழுதும் சிந்தனை செய்யாதவர்களும்—ஏற்கனவே தாம் கொண்டுள்ள அபிப்பிராயங்களுக்கு முரணாக இல்லாதிருப்பின்—பிறர் கூறுவனவற்றையெல்லாம் அப்படியே நம்பி விடுவார்கள்.

ஆனால் நுட்ப புத்தியும் ஆராய்ச்சியுணர்ச்சியும் சுயமாகச் சிந்தனை செய்யும் பழக்கமும் உடையவர்கள் தமது நம்பிக்கைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் பகுத்தறிவுக்குப் பொருத்தமான ஆதாரமுண்டா எனப் பாராதிருக்கமாட்டார்கள். பகுத்தறிவுக்குப் பொருந்தாத அபிப்பிராயங்களையெல்லாம்—விஷயங்களை எல்லாம்—அவர்கள் நிராகரித்து விடுவார்கள். பகுத்தறிவுக்குப் பொருத்தமானவைகளையெல்லாம் அவர்கள் நம்புவார்கள். அவ்வாறு நம்புவதினால் தமது பழைய அபிப்பிராயங்களையும் நம்பிக்கைகளையும் நிராகரிக்க வேண்டியதாக ஏற்பட்டாலும் அவர்கள் தயங்க மாட்டார்கள்.

“நீ எப்படியறிந்தாய்? அதை உனக்கு நிரூபிக்க முடியுமா? ஆதாரங்கள் எவை? நம்புவதற்குள்ள காரணங்களை நன்கு பரிசீலனை செய்து பார்த்தாயா?”

என்பனபோன்ற கேள்விகளை இடையறாது கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். மற்றவர்களிடம் இக்கேள்விகளை வெகு சாதுரியமாகக் கேட்கவேண்டும். மற்றும் இக்கேள்விகளைப் பிறரிடம் கேட்பதற்குமுன் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக்கொள்ளவும் வேண்டும்.

மற்றும் ஒரு விஷயம். ஒரு விஷயம்சரியானதென்று நமக்குத் திருப்தி ஏற்பட்டால் அதை எவ்வாறு விளக்குவது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

கருத்துகள், அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் முதலியவை எவ்வெக்காரணங்களால் நம்பவேண்டும் என்பது பின்னர் விளக்கிக்

கூறப்படும். தம் பார்வைக்கு வரும் விஷயங்களை எவ்வாறு பரிசீலனை செய்து உண்மை காணவேண்டும் என்பதை வாசகர்களுக்கு ஒருவாறு விளக்குவதே நமது தற்கால நோக்கம்.

(1) பிறர் முடிபினாலும்

(2) நமது சொந்த முடிபினாலும்

அபிப்பிராயங்களும் நம்பிக்கைகளும் ஆதாரமுடையவை எனக்கொள்ளலாம். தாமாக ஆராய்ச்சி செய்து முடிபுக்கு வராமல், ஆராய்ச்சி செய்து ஒரு முடிபுக்கு வந்துள்ள பிறர் அபிப்பிராயங்களை நம்புவதற்குள்ள நிபந்தனைகளை கீழே விளக்கிக் கூறுவோம்.

அவைகளை விளக்கிக்கூறிய பிறகு, சுயமாகச் சிந்தனை செய்வதையும் ஒரு முடிபுக்கு வருவதையும்பற்றி விளக்குவோம்.

பிறர் முடிபை ஒப்புக்கொள்ளுதல்.

பிறர் முடிபுகளை நாமாக ஆராய்ந்து பாராமல் ஒப்புக்கொள்வது பகுத்தறிவுப்படி நியாயமாகுமா! நாம் அவ்வாறு ஒப்புக்கொள்ளலாமா!

ஆம்! தாராளமாக ஒப்புக்கொள்ளலாம்; பிறர் ஆராய்ச்சியையும் முடிபையும் தமது ஆராய்ச்சியாகவும் முடிபாகவும் ஒப்புக்கொள்ளலாம்.

அறியப்பட்ட விஷயங்கள் எல்லாம் எவ்வாருக்கும் தெரிந்தவை தான், அல்லது அறியமுயலுகிறவர்களுக்கெல்லாம் விளங்கக்கூடியவைகள் தான் என்று நம்பியகாலம் ஒன்றிருந்தது. ஆனால் அந்தக்காலம் மலையேறி விட்டது. இன்று அறியப்பட்டுள்ள விஷயங்களில் ஆயிரத்தில் ஒரு பகுதியை அல்லது லக்ஷத்தில் ஒரு பகுதியைக்கூட ஒருவன் அறிந்துகொள்வது சாத்தியமல்ல. எனவே நாம் சொந்தமாக ஆராய்ந்து ஒரு முடிபுக்கு வரமுடியாத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஏனெனில் அவ்விஷயங்களைப்பற்றி நாம் எதுவுமே அறியோம்.

ஏதேனும் ஒரு துறையில் இது காறும் வெளிவந்துள்ள உண்மைகளை நாமாகவே ஆராய்ந்து பார்த்து ஒப்புக்கொள்ள வேண்டுமானால் நம் வாழ்நாள் முழுதும் செலவு செய்தாலும் முடியாது. பிரபஞ்ச அமைப்பைப்பற்றி வானசாஸ்திரிகளும் கணித

சாஸ்திரிகளும் கூறியுள்ள உண்மைகளை யெல்லாம் நாமும் ஆராய்ந்து பார்த்து முடிபுகட்ட வேண்டுமானால் நம் வாழ்நாள் முழுதும் அம்முயற்சியில் ஈடுபடவேண்டியதாகவே ஏற்படும். மேலும் அத்தகைய ஆராய்ச்சியில் நாம் ஈடுபட்டாலும் பல விஷயங்களில் நாம் பிறர் முடிபுகளைத்தான் ஒப்புக்கொள்ளவேண்டியதாக வரும். பூகர்ப்ப சாஸ்திரிகள்—பிரகிருதி நூல் வல்லார்—உயிர் நூல் வல்லார்—மநோதத்துவ ஆராய்ச்சியாளர்—மனிதவர்க்க ஆராய்ச்சியாளர்—பிறமொழி நூல் மொழிபெயர்ப்பாளர்—பிறநாட்டு அரசியல் விஷய நிபுணர்கள்—இஸ்லாம் மத ஆராய்ச்சியாளர்—ஐப்பானிய சரித்திராசிரியர்கள்—சுகாதார நிபுணர்கள்—க்ஷயரோக நிபுணர்கள்—முதலியோர் கண்ட உண்மைகளை யெல்லாம் நாமும் ஆராய்ந்து முடிபுகாண என்னுவது சாத்தியமாகுமா! அவைகளை அப்படியே நம்புவதைத் தவிர வேறு வழியுண்டா! ஆகவே இத்தகைய விஷயங்களில் பிறர் முடிபுகளை ஒப்புக்கொள்வது தவறாகாது.

ஃ ஃ ஃ

ஒரு துறையில் தற்காலம் வெளிவந்துள்ள அறிவுகளை—அல்லது உண்மைகளை யெல்லாம் அறியாத ஒருவன்—அவ்வுண்மைகளைக்காணப் பிறர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என அறியாத ஒருவன்—இது காறும் அறியப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான உண்மைகளில் சிலவற்றைத்தான் அறிந்துள்ளதாக பாவித்துக்கொண்டு, இதுகாறும் அறியப்பட்டுள்ள உண்மைகளையெல்லாம் அவனும் ஆராய்ச்சி செய்யத்தொடங்குவது எவ்வளவு மதியீனம்? ஒரு பிரச்சினையைப் பற்றிய தகவல்கள் எவ்வளவுக்கெவ்வளவு சுருக்கமாக அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பிரச்சினை சுளுவானதென்று அவர்கள் நம்பிவிடுகிறார்கள் ஏதேனும் 10 விஷயங்களை நாம் அறிந்திருந்தால் அவைகளுக்குப் பொருத்தமான ஒரு கொள்கையை நிர்ணயம் செய்வது அவ்வளவு கஷ்டமானதல்ல. ஆனால் நமக்குத் தெரியாதவைகளும்—பிறர் அறிந்துள்ளவைகளுமான 5 லக்ஷம் விஷயங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம. அப்படியானால் நாம் கண்ட கொள்கைகள் என்னவாகும். 10 விஷயங்களுக்குப் பொருத்தமான கொள்கை 10 ஆயிரம் விஷயங்களுக்குப் பொருத்தமாக இருக்குமா?

மற்றும் விஷயாராய்ச்சி செய்ய, விஞ்ஞான முறையில் பழக்கம் பெற்ற மனம் முக்கியமான தேவையாகும்; அந்த மனம்

காரண காரிய ஆராய்ச்சியில் வெகு காலம் பழகி அனுபவம்பெற்றிருக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

அம்மாதிரி விஷயங்களில் பிறர் முடிவுகளை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாதுதான். பிறர் சித்தாந்தங்களை ஒப்புக் கொள்வதும் உசிதமல்ல.

நமக்கு வேண்டுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமான முடிவே. ஏனெனில் பகுத்தறிவுக்கொத்த முறையில் ஆராய்ச்சி செய்து கண்ட முடிவுகளை நமக்கு நிராகரிக்க முடியாது.

ஆனாலேயே, ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நாமாகி ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமில்லையென்றும் பிறர் முடிவுகளை ஒப்புக் கொண்டால் போதுமென்றும் ஏற்படுகிறது.

நம்பத்தக்க பிறர் முடிவுகளை ஒப்புக்கொள்வது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதே.

அவர்களது முடிவுகளுக்கு ஆதாரமாக உள்ளவைகளை நாம் ஆராயத் தேவையில்லை. எனினும் ஒரு ஆராய்ச்சி வேண்டியது தான். எனவே அவர்களுடைய முடிவை நாம் ஆராயத்தேவையில்லை. முடிவு செய்தவர்களைப் பற்றி நாம் ஆராயவேண்டும். நமது ஆராய்ச்சியில் அவர்கள் சரியானவர்கள் எனத்திருப்தி ஏற்பட்டால் அவர்கள் முடிவுகளை தாராளமாக ஒப்புக் கொள்ளலாம். பிறர் முடிவுகள் நமக்குத் திருப்தியளிக்காவிட்டால் ஒன்றில் நாமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்; அல்லது எத்தனைய முடிவையும் ஒப்புக் கொள்ளாமல் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும்.

"கடவுள் உண்டு"

எல்லாப்படைப்புகளுக்கும் ஒரு காரணம் வேண்டுமல்லவா? ஆதலால் கடவுள் ஒருவர் உண்டு என்று சொல்லுகிறேன்.

ஆஸ்திகன்.

அப்படியானால் கடவுள் ஏற்பட்டதற்கோ அல்லது கடவுள் ஒருவர் இருப்பதற்கோ ஒரு காரணம் வேண்டுமல்லவா? தயவு செய்து சொல்லுங்கள். நாஸ்திகன்.

ஆகமத்தின் புரட்டு.

திருவிழாவின் ரகசியம் தெரியுமா?

(பண்டிதர் அ. கிருஷ்ணசாமி.)

நமது நாடு எத்துறையிலும் பெயர் பெற்று விளங்கினதைப் போன்றே, கோயில்களிலும் பெயர்பெற்று விளங்குகின்றது. நமது நாட்டில் கோயில்கள் கோடி கோடி. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் ஔவையார் வாக்கிற் போட்டி போட்டுக் கோயில் கட்டுவோர் கோடாகோடி; இங்ஙனம் கோயில் களுக்குச் செலவிடப்படும் செல்வமும் கோடி கோடி; கோடி கோடி யாகச் செலவு செய்வதோடு அமைந்தனரா? இல்லை; இல்லை. அக்கோயில்களுக்கு உண்டாக்கிய திருவிழாக்களுங் கோடி கோடி. அத்திருவிழாக்களுக்குச் செலவு செய்யப்பெறும் செல்வமுங் கோடி கோடி. இதனைக் காண்பதற்கு நாடோறும் செல்லும் மனிதரின் தொகையுங் கோடி கோடி. அதற்குச் செலவிடப்படும் செல்வமும் கோடிகோடி. அதனால் வரும் அல்லலும் கோடி கோடி.

எத்தனையோ கோடி இன்னல்களுக்கென்றோ, திரு விழாக்கள் நிலைக்களனாயுள்ளன! பழங்காலத்தில் திருவிழாக்கள் உண்டான காரணத்தை யாராய்வோர் யாவர்? இத்திருவிழாக்கள் இவ்வாறான அலங்கோலத்தோடு தொடங்கப்பெற்ற காலம், யாது என்பதனை யாராய்வார் யாவர்? கோடிக்கணக்காகத் திருவிழாக் களுக்குச் செல்லுகின்றனரே! அவருள் யாரேனும் இதைப்பற்றி எண்ணுகின்றனரா? ஆராய்ச்சியாளர் இதைப்பற்றி ஆராய்கின்ற னரா? திருவிழாவென்றால் அனைவரும் குறும்பாடுகளைப்போல் ஓடுகின்றனரே!

(இந்தியக் கோயில்களில் கடவுளர்களுக்குக் கழுதை வாக னம் இல்லை; ஏன், இங்கு மனிதர்கள் கழுதையின் பேரில் ஏறிச்செல்லும் வழக்கமின்று. ஐரோப்பாவில் கூச்சமின் றிக் கழுதையின் மேல் ஏறுகின்றனர். இங்கும் இந்தியர் ஐரோப் பியரைப்போன்று கழுதையையும் வாகனமாகக் கொள்ளின் தாங் கள் ஏறும் குதிரையைக் கடவுளுக்கு வாகனமாக வைத்ததைப் போல் கழுதையையும் அமைத்து விடுவர்.) கடவுளைக் கழுதையின்

மேல் வைத்துத் தூக்கிவருவதெனினும் அக்காட்சியைக் காண்போருக்குண்டாகுங் களிப்பு என்னே! என்னே!.

இது காலை நடைபெறும் திருவிழாக்கள் பழங்காலத்தில் கிடையா. ஆகமங்கள் தோன்றிய பின்னரே, இத்திருவிழாக்களுக்கும் ஆதாரவுகள் ஆக்கப்பட்டன. இத்திருவிழாக்களுக்கு ஆதாரங்கள் ஆகமங்கள் என்பதை அறையவும் வேண்டுமோ? இவ்வாகமக் கொள்கையுடையார், ஆகமங்கள் ஆதிமுதல் இருந்ததென்றே அறைகுவர். "வேதமுடன் ஆகமம்" என்னும் தொடர்களைக் கொண்டு வேதம் தோன்றிய பொழுதே, இவ்வாகமும் தோன்றிற்று என்பர், இக்கூற்றை டாராய இதுசமயமன்று. வேதம் ஆகமம் எனத் தொடர்ந்து சொல்வதினாலேயே, ஆகமம் வேதத்தைப்போல் பழைய நூலென்று பகரவொண்ணாது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் ஆகமம் என்ற மொழியே தமிழ்நூல்களில் இல்லை; இல்லை. பழைய இந்திய அரசாங்கம் ஒடுங்கி, முகம்மதிய அரசாங்கம் வீறுபெற்று எழுந்த காலத்திலே இவ்வாகமங்கள் எழும்பின. பின்னர் முகம்மதிய ஆளுகை அடங்கி, இந்து அரசர்கள் தங்களுக்குள் அரசாட்சி வகுத்து ஆளுகை தொடங்கும்பொழுதே, இவ்வாகமும் ஆளத்தொடங்கிற்று. முகம்மதிய அரசராலும், ஆளுகையினாலும் அல்லலுற்றுக்கிடந்த அரசருள்ளத்திலும், குடிகளுள்ளத்திலும் இவ்வாகம வித்துக்களை விதைப்பது மிக எளிதாயிற்று. வெகு விரைவில் இவ்வாகமங்களுக்கும் இடைற்றினை உண்டாக்கிய பிராமணர்களுக்கும் அரசரும் குடிகளும் ஆட்பட்டனர்; அவ்வாறு ஆடினர். பௌத்த மதத்தால் ஒழிந்த பிராமணர் ஆளுகை, முகம்மதிய ஆளுகையால் மிதித்துத் துவைக்கப்பட்டும் குற்றுயிர் வைத்துக்கொண்டிருந்து, பின்னரும் இந்தியராளுகையில் தலைகாட்டிய வன்மையை என்னென்பது; என்னென்பது. இடைக்காலத்தில் இவ்வாகமங்கள் ஆக்கப்படாமலிருந்தால், இப்பிராமணர்களுக்கு இதுகாலை, வேறு உயர்ந்த பிழைப்பில்லை என்பதை அப்பொழுதே அறிந்த அறிவின் பெருமை என்னே! என்னே! அழிந்து ஒழிந்துபோன பெருமையையும் உயர்வையும் மீண்டும் பெறுவதற்காகப் பிராமணர் கண்டுபிடித்த வழிகளில், இவ்வாகமங்களே சிறந்தவையாகும். இவற்றிற்குத் துணை நின்றன புராணங்களுமாகும்.

இது காலை, நடைபெறும் திருவிழாக்கள் ஒவ்வொன்றிற்கும் காரணங்களும், தத்துவார்த்தங்களும் ஆகமங்களிலிருந்து காண்பிக்கின்றனர். கோயிலில் தாசிகள் வேசித்தொழில் செய்வதற்கும் தத்துவார்த்தமுண்டு. சுவாமி பள்ளியறைக்குப் போவதற்கும் தத்துவார்த்தமுண்டாம். இத்தத்துவார்த்தக் குப்பைகளைக்

கிளறவேண்டாம்; கிளற வேண்டாம். அது கிளறிக் கிளக்கின் அப்பட்டர் குப்பையைக் கிளறினதை ஒக்கும்; ஒக்கும். திருவிழாக்கள் ஆயிரக்கணக்காகப் பெருகினதைப் போன்றே, அவற்றின் அலங்காரங்களும், ஆயிரம் ஆயிரமாகப் பெருகிவிட்டன, இவ்வாறான அலங்காரங்களுக்கும் தத்துவார்த்தங்கள் கூறுவாருண்டு. ஐந்து தலையுடைய சேஷவாகனத்தின் மேல் கடவுள் பவனிவருவான் ஏனென்றால், "அவ்வைந்து தலைகளும் பஞ்சேந்திரியங்களைக் குறிப்பன; அவ்வைந்தையும் அடக்கியாள வேண்டும் என்பதற்கடையாளம்," எனத்தத்துவார்த்தம் சொல்லத் தெரியாதா? குரங்குவாகனம் ஏனென்றால், மனம் குரங்கு; அதை அடக்கி ஆளல் வேண்டும் என்பதற்கு அடையாளம் எனத்தத்துவார்த்தம் கூற முடியாதா? வரியில்லா நிலத்தில் விளைவதை மனம்போனவாறு உண்டுவருபவர்க்கு இவற்றிற்கெல்லாம் தத்துவார்த்தம் கூறல் அருமையா? அருமையா? இவற்றையன்றி வேறு வேலையும் என்? இத்தத்துவார்த்தங்களுக்கு நம்மரசரும் மயங்கினரே! மக்களும் மயங்கினரே!

திருவிழாக்களில் கடவுளுக்கு அலங்காரத்திற்காகக் கூறப்படுங் காரணங்கள் விந்தை, விந்தை. கையில் கடகமிடுவதற்கும், கால்களில் கழல் கட்டுவதற்கும், முடியில் முடியணிவதற்கும் பிறவற்றிற்கும் பலப்பல காரணங்கள் பகரப்படுகின்றன.

அவையனைத்தும் வெறும் பூசமேயன்றி வேறன்று. சுருங்கக் கூறின், அரசரும் மற்றவரும் தாம் தாம் நுகர்வதற்கு எவ்வெப்போகப்பொருள்கள் உண்டோ, அவையனைத்தும் கோயிலில் கடவுளுக்கும் வேண்டுமென்று அமைத்தனர். கோயில் திருவிழாச் சிறப்பு முழுவதும் அரச வைபவமே; அரசகோலமே; அரசபோகமே. அரசன் ஏறுவதற்குத் தேர் வேண்டுமென்றால், கடவுளுக்கும் தேர் வேண்டும்; அரசனுக்கு வேசி வேண்டுமென்றால், கடவுளுக்கும் வேசி வேண்டும்; மக்கள் மணம் செய்வதென்றால் கடவுளுக்கும் மணம் வேண்டும்; இவர்களுக்குச் சாந்தி முகூர்த்தம் என்றால், பகவானுக்கும் சாந்தி முகூர்த்தம் வேண்டும். இங்ஙனம் எவ்வெவ்வகையில் மனிதர் போகம் நுகர்கின்றார்களோ, அவ்வவ்வகையனைத்தும் ஆண்டவனுக்கும் அமைத்து விட்டனர். இவ்வாறாமே திருவிழாவின் வரலாறு.

இவ்விழாக்களின் அலங்காரங்கள் இது காலை கணக்கிலடங்கா; ஆடம்பரங்கள் அளவிலடங்கா. கொழுத்த வருமானமுள்ள கோயில்களில் நடைபெறும். திருவிழாக்களுக்கு அயல்

நாட்டிலிருந்து மருந்து வேடிக்கைகளும் பிற களியாடல்களும் வந்து குவிகின்றன. அலங்காரங்களும், அயல் நாட்டு அலங்காரக் கோலங்களாயின. அந்தோ! இம்மானிடர் எங்ஙனம் அயல் நாட்டு வேடத்திலும், அலங்காரத்திலும் மூழ்கி மயங்கினரோ, அங்ஙனமே ஆண்டவன் திருவிழாவிலும் செயவேண்டுமென்று மாழ்கினரோ? பழங்காலத்தில் வெறும், கல், மண், பொன், செம்பு, முதலிய சிலைவடிவாக அமைந்த ஆண்டவனின் இயற்கைக் காட்சியைக் காணப்பெறும் நல்லூழ் அழிந்தவராய், செயற்கைக் கோலங்கள் செய்து காணக் காப்புக்கட்டினர், கட்டுகின்றனர். இச்செயற்கைக் கோலங்களால் விளைந்த இன்னலை இயம்பவும் ஒண்ணுமோ? அதனால் நாடு நலனழிந்து அடிமைக் குழியில் வீழ்ந்து புரண்டுகொண்டிருக்கிறதே! இச்செயற்கைக்கோலம் செய்தோர் இதனோடும் நின்றனரோ? முன்பு வெண்மை, சிகப்பு, நீலம் முதலிய கற்களால் மாலைகள் இயற்றி "இறைவ"னுக்கு அணிந்தனர். இப்பொழுது அம்மாலைகளை மாற்றி "ஆண்டவ"னுக்கு அம்மாலைகள் அணியும் இடங்களில் மின்சார விளக்கு மாலைகள் அணிகின்றனர். தமிழ் நாட்டில் முதன் முதல் சென்னையம்பதியில் கந்தகோட்டக் கந்தசாமிக் கடவுளின் திருவிழாவில், கந்தசுவாமிக்கு மின்சாரம் ஏற்றிய விளக்குகளை மாலைகளாகவும், பிற அணிகளாகவும் அலங்காரங்கள் செய்து ஊர்வலம் செய்வித்தனர். இச்செய்தி நாடெங்கும் சென்றது. அங்ஙனமே பல கோயில்களிலும் ஆரம்பமாகியுள்ளன. சமீபத்தில் சென்னிமலையம்பதியில் நடந்தேறிய திருவிழாவில் இம்மின்சார விளக்கு மாலைகள் கடவுளுக்கு அணியப் பெற்றதும், அதனால் உண்டாகிய பூசல்களும் புகல ஒண்ணுமோ? அக்கோயிற் பூசாரி பிராமணன், வேறு காரணத்தை முன்னிட்டு ஆகமத்தின் பேரைச் சொல்லி தடுத்து விட்டனன். எனினும், அவ்வலங்காரத்துடன் "ஆண்டவன்" பவனி நடந்தேறியது. பாவம், அப்பார்ப்பனர் இவ்வலங்காரங்களுக்கும் ஆகமத்தில் விதியுள்ளதென்று விளம்பி, அதற்கு வேறு இறையிலி நிலம் [மானிய நிலம்] பெறுவதற்கு மறந்துவிட்டானேயென்று பெரிதும் வருந்துகின்றேன். பொறாமையினால் ஏற்பட்ட கெட்ட எண்ணம் பலிக்காமல் போல் விட்டது, என் செய்வது?

நிகழ்காலச் செயற்கை நாகரிகநாகம் யாரைத் தீண்டாமல் விடுகின்றது; மனிதரைத் தீண்டிற்று; மாள்கின்றனர். ஆண்டவனைத் தீண்டிற்று; அடிமையாயினர். இத்துணைச் செயற்கைக் கோலங்கள் செய்தா கடவுளை வழிபடல் வேண்டும்; கும்பிட

வேண்டும்; கூத்தாட வேண்டும்.? மின்சார விளக்கு அலங்காரம் செய்தனை "ஆண்டவன்" காட்சியைக்கண்டு கண்டு கண்ணீர் பெருக்குகின்றனர்; கன்னத்தில் அறைந்து கொள்ளுகின்றனர்; துள்ளுகின்றனர்; துடிக்கின்றனர். எதற்கு இத்துணை ஆரவாரங்கள் செய்கின்றர்; மின்சார விளக்கின் செயற்கை அலங்காரங்களுக்கா? வேறு "ஆண்டவ"னின் இயற்கை வடிவத்தின் அழகில் ஈடுபட்டா? அவ்வலங்காரங்களும் ஆரவாரங்களும் இல்லையேல் திருவிழாவிற்குச் செல்லுவோர் யார்? செல்லுவோர் யார்? செயற்கை நாகரிகச் சேற்றில் புரளுகின்றனர்; அதின் புழுக்களுக்கு இரையாகின்றனர் இச்செயற்கை நாகரிகம் கோயில்களிலும் திருவிழாக்களிலும் புகுந்து விட்டதே எனப்புத்தி புழுங்கிப் புழுங்கிப் பொங்குகின்றதே! இடைக்கால ஆகம வழிபாடுகள் அழிந்து பழங்காலத் தமிழ் வழிபாடுகள் தழைக்கும் நாள் எந்நாளோ! இயற்கை வடிவில் "இறைவனை" வழிபட்டுக் காலத்திற்கியன்ற திருவிழாக்கள் செழிக்கும் நாள் எந்நாளோ! கோயில் பூஜைக்கும் பரம்பரைப் பாத்தியம் பாழாகும் நாள் எந்நாளோ! பூசாரிகள் பிராமணரே என்றைக்கும் உரியவன் என்பது ஒழியும் நாள் எந்நாளோ! அந்நாளே நம் நாடு நலம் பெறும் நாள்; சமயச் சண்டை சாகும் நாள்; சாதிச்சண்டை சாயும் நாள்; சமத்துவத் தழைக்கும் நாள்; எக்குலத்தவரும் வேற்றுமையின்றிக் கோயிலில் சென்று கும்பிடும் நாள் "ஆண்டவ"னே! அந்நாளை விரைவில் அருள்க; அருள்க.

---

1. "தமிழ்ப்பாஷையில் காற்று எனுஞ் சொல்லுக்கு 34 பிரதிச்சொற்களும், நீருக்கு ஐம்பதும், மேகத்திற்கு முப்பத்தைந்தும், மண்ணுக்கு அறுபத்திரண்டும், மலைக்கு அறுபதும்," "2. குணத்தினையுணர்த்த 21 சொற்களும், அச்சத்தினையுணர்த்த 19 சொற்களும், உயர்வினையுணர்த்த 17 சொற்களும், மலைவினையுணர்த்த 28 சொற்களும் இருக்கின்றன"

1. Tamil Studies.

2. பண்டைக்காலத்தமிழரும் ஆரியரும்.

சார்லஸ் டார்வின் வாழ்க்கை வரலாறு.

(E. லாரென்ட்.)

மனிதனும் மற்றுமிப் பூமியிலுள்ள பல உயிர்களும் எவ்வாறு தோன்றின என்னும் பிரச்சினையை விளக்க எழுந்துள்ள சித்தாந்தங்கள் பல. அவை யாவற்றிலும் இன்று அறிவு உலகால் ஒப்புக்கொள்ளப்பட்டது பரிணாம சித்தாந்தமேயாகும். பரிணாம சித்தாந்தம் இரண்டாயிர வருஷங்களுக்கு மேலாகவே வழங்கி வந்தபோதிலும், மறுக்க வியலாத விஞ்ஞான பூர்வமான பல சான்றுகளுடன் இதை எடுத்து நிலைநாட்டியவர் சார்லஸ் டார்வின் என்னும் பெரியாரேயாவார்.

குடும்பப் பெருமை.

டார்வின் தொன்மைப் புகழ் வாய்ந்த ஓர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் மூதாதைகள் 500 வருஷங்களுக்கு முன்பிருந்தே நல்ல நிலையிலிருந்து வந்ததாகத் தெரியவருகிறது. டார்வினுடைய பாட்டனாராகிய எரேஸ்மஸ் டார்வின் என்பார் ஒரு சிறந்த நூலாசிரியர். திறமை வாய்ந்தவோர் வைத்தியர். அக்காலத்தில் இங்கிலாந்தை யாண்டு வந்த மூன்றாம் ஜார்ஜ் மன்னருக்கு வைத்தியாக நியமிக்கப் பெற்று அவ்வுத்தியோகத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. டார்வினுடைய தந்தையும் ஓர் வைத்தியர். டார்வினுடைய தாய் வெட்ஜ்வுட்பென் என்னும் மண் பாத்திரங்கள் செய்வதில் திறமை வாய்ந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்.

பிறப்பு.

லண்டன் நகருக்கு வடமேற்கே 160 மைல் தூரத்திலுள்ள ஷ்ரூஸ்பெரி (Shrewsbery) என்னுமிடத்தில் 1809-ம்

ஆண்டு சார்லஸ் டார்வின் பிறந்தார். இவர் பிறந்த ஆண்டு சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அவ்வாண்டிலேதான் டெனிசன், ஆபிரகாம்லிங்கன், ஜான்ஸ்ட்டுவார்ட் பிளாக்சி முதலிய அறிவாளிகளும் பிறந்தனர். சிறு வயதில் டார்வின் திடகாத்திர திரேகமுடையவராகவும், சுறுசுறுப்புடையவராகவும், சொல்லிக்கொடுத்தவற்றை உடனே கற்றுக்கொள்ளுமியல்புடையவராகவும் விளங்கினார். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்டதை யொக்க டார்வின் தனது சிறு பிள்ளைப் பருவத்திலேயே இயற்கை சாஸ்திரத்தில் தனக்கு உள்ள பிரியத்தைக் காண்பித்தார். இறந்துபோன பூச்சி புழுக்களை எடுத்து சேர்த்து வைப்பதும், அவற்றை ஆராய்வதும் இவருடைய விளையாட்டாயிருந்தன. அவருடைய ஒன்பதாவது வயதில் உள்ளூரிலுள்ள ஒரு சிறு பள்ளிக்கூடத்திற்குச் சென்று படித்துவந்தார். பாடப் புத்தகங்களைப் படிப்பதைவிட இதர நூல்களை வாசிப்பதிலேயே அதிக சிரத்தை எடுத்துக்கொண்டார்.

வைத்தியக் கல்வி.

இவருடைய 16-வது வயதில் டாக்டர் தொழிலுக்குப் படிக்க வைக்கும் உத்தேசத்தோடு இவர் தந்தை இவரை எடின்பர்க் (Edinburg) சர்வகலாசாலைக்கு அனுப்பினார். டார்வினுக்கு வைத்தியத் தொழிலில் விருப்பமில்லை. தனது தந்தை நல்ல பொருள் தேடி வைத்திருக்கும்போது தான் ஏன் விருப்பமில்லாத தொழிலில் பிரவேசிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தனது படிப்பை அலட்சியஞ் செய்தார். அவ்வூரிலிருந்தபோது அடிக்கடி கடற்கரைக்குச் சென்று நீர் வாழ்வனவற்றைப் பரிசோதிப்பதில் மிகவும் உற்சாகங் கொண்டிருந்தார். தனது ஆராய்ச்சியில் சில அற்புதமான உண்மைகளையும் கண்டுபிடித்து அவற்றைப் பள்ளிக்கூட மாணவர் சங்கத்தில் உபந்யாசமும் செய்தார்.

சமயப் பயிற்சி.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு டார்வின் வைத்தியராகும் திட்டம் கைவிடப்பட்டது. பிறகு பாதிரித் தொழிலுக்குப் படிக்கும் உத்தேசத்துடன் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சார்லஸ் மூன்று வருடம் பயின்றார். நல்ல அறிஞர்களின் அறிமுகத்தைப் பெற்

றார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் புரபஸர் ஹென்ஸ்லவ் (Prof. Henslow) என்பவராகும். அவரிடமிருந்து டார்வின் பூகர்ப்ப சாஸ்திரம் (Geology) தாவர வர்க்க சாஸ்திரம் (Botony) விஞ்ஞான முறை (Scientific method) இவற்றை நன்கு கற்றுணர்ந்தார்.

கப்பல் பிரயாணம்.

ஸெட்விக் (Sedwic) என்னுமறிஞரோடு ஒரு முறை டார்வின் பூகர்ப்ப சாஸ்திரத்தைப்பற்றி நேரில்கண்டு கற்பதற்காக ஒரு ஊருக்குச் சென்று திரும்பிவந்தபோது புரோபஸர் ஹென்ஸ்லவ்விடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அக்கடிதத்தில் கேப்டன் பிட்ஸ்ராய் (Captain Fitzroy) என்பவர் தென் அமெரிக்காவுக்கும் இன்னும் பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள பல தீவுகளுக்கும் பிரயாணம் செய்யப்போவதாகவும், அப் பிரயாணத்திற்குத் துணையாக இயற்கை சாஸ்திர அறிவுடைய ஒரு வாலிபன் தேவை என்றும் அவ்விடத்திற்கு தான் டார்வினையே சிபார்சு செய்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டதும் டார்வின் அளவுகடந்த மகிழ்ச்சியடைந்தார். ஆனால் அவருடைய தந்தை தன் மகன் பாதிரித் தொழிலில்பிரவேசித்தல் தவறிவிடுமென அஞ்சி பிரயாணத்தை அனுமதிக்கவில்லை. பிறகு டார்வினுடைய மாமனாகிய வெட்ஜ்வுட்பென் என்பவர் கேட்டுக்கொண்டதின் பேரில் தந்தை பிரயாணத்துக்கு உத்தரவு கொடுத்தார்.

1831-ம் வருஷம் H. M. S. பீகில் என்னும் கப்பலில் கேப்டன் பிட்ஸ்ராயோடு டார்வின் தனது கப்பற் பிரயாணத்தை ஆரம்பித்தார். மறைந்துபோய் கிடந்த அவருடைய அபார விஞ்ஞான சக்தியை உலகில் பிரகாசிக்கச் செய்வதற்கு இப் பிரயாணமே காரணமாய் விளங்கிற்று. பிரயாண காலத்தில் வாசிப்பதற்காக டார்வின் சில நூல்களை எடுத்துச் சென்றார். அவற்றில் குறிப்பிடத்தக்கது ஸர் சார்லஸ் லயல் (Sir Charles Lyell) என்னும் அறிஞரால் எழுதப்பட்ட Principles of geology என்னும் பூகர்ப்ப சாஸ்திர நூலாகும். இக் நூலின் கருத்து யாதெனில் "பூமி இப்போது கொஞ்சங்கொஞ்சமாக மாறுதல் அடைந்து வருவதுபோல் கடந்த பலயுகங்களில் பல மாறுதல்கள் நடந்தேறின" என்பதேயாகும். இக்நூலைப்பற்றி புரபஸர் ஹென்ஸ்லவ் டார்

வினுக்குக் கூறியதாவது "இதை நன்றாகப்படி, ஆனால் இதன் முடிவுகளை மட்டும் ஏற்றுக்கொள்ளாதே" என்பதா கும். டார்வின் அந்நூலை நன்றாகப்படித்தார். ஆனால் ஹென்ஸ்லவ் கூறியதற்கு மாறாக அந்நூலின் முடிவுகளை ஒப்புக்கொண்டதுமல்லாமல் அந்நூலுக்கு மேல் ஒருபடி ஏறவும் ஆரம்பித்தார்.

சுற்றுப்பிரயாணத்தில் பூமி சாஸ்திரத்தைப்பற்றியும், உயிர் சாஸ்திரத்தைப்பற்றியும் அரிய பல உண்மைகளைத் தெரிந்துகொண்டார். பிராணிகளை அறுத்து அவற்றின் உறுப்புகளை ஆராய்வதில் டார்வினுக்குப் பழக்கமில்லை, ஆனால் கப்பற் பிரயாணத்தில் அதையும் தனது சொந்தமுயற்சியால் கற்றுக்கொண்டார். பிரயாண காலத்தில் தான் கண்ட அரிய விஷயங்களையெல்லாம் ஒரு குறிப்புப்புத்தகத்தில் எழுதி வந்தார்.

விவாகம்.

1836ம் வருஷம் டார்வின் தனது கப்பற் பிரயாணத்தை முடித்துக்கொண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்தார். "பீகில் சுற்றுப்பிரயாணம்" (The Voyage of the Beagle) என்னும் புத்தகத்தை எழுதி வெளியிட்டார். தனது தாய் வழியிலிருந்து ஒரு பெண்ணை மணந்துகொண்டு நான்கு வருஷம் லண்டனில் வசித்து வந்தார். பிறகு லண்டன் வாழ்க்கை பிடிக்காமல் டௌன் (Down) என்னும் ஊருக்குச் சென்று வசித்து வந்தார்.

டார்வின் தனது கப்பற்பிரயாணத்தை ஆரம்பித்த போது "இன்று உலகில் காணப்படும் உயிர்கள் யாவும் இப்போதிருப்பது போலவே படைக்கப்பட்டன" என்று நம்பியிருந்தார். ஆனால் பிரயாண காலத்தில் கண்ட காட்சிகள் இந்த நம்பிக்கையை சதாபாதித்து வந்தன. "ஏன் உயிர்வர்க்கங்கள் காலத்தையும் இடத்தையும் பொறுத்து சில சம்பந்தங்களைக் காண்பிக்கின்றன? பஸிபிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளில் வாழும் மிருகங்களும், தாவரங்களும் ஏன் தென் அமெரிக்காவிலுள்ளவற்றை அதிகமாக ஒத்திருக்கின்றன? தென் அமெரிக்காவில் பூமியிலுள்ளிருந்து அகப்படும் ஜந்துக்களின் (Fossils) அமைப்பும், அதேயிடத்தில் இப்போது வாழும் பிராணிகளின் உடலமைப்பும் ஒன்றை ஒன்று சில விஷயங்களில் ஒத்தும், சில விஷயங்களில் பேதப்பட்டும் இருப்

பதன் காரணமென்ன?'' என்ற கேள்விகள் இவர் மனதில் உதிக்கலாயின. இன்று காணப்படுவதுபோல் உயிர்கள் படைக்கப்பட்டன என்ற சித்தாந்தம் திருப்தியளிக்கவில்லை.

உயிர்வர்க்கங்களின் உற்பத்தி.

ஆகவே டார்வின் 19 வருஷம் ஆழ்ந்த ஆராய்ச்சியிலீடுபட்டார். பலநூல்களையும் பத்திரிகைகளையும் வாசித்தார். பிராணிகளையும், தாவரங்களையும் சதா ஊன்றி கவனித்து வந்ததில் அரிய பல உண்மைகளைக் கண்டுணர்ந்தார். 1859ம் வருஷம் நவம்பர் மாதம் தனது ''உயிர்வர்க்கங்களின் உற்பத்தி'' (Origin of Speeces) என்னும் புகழ்பெற்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் இப்பூமியில் காணப்படும் பல உயிர் பேதங்களும் ஆதியிலிருந்த சில அற்பமான உயிர்க்கிருமிகளிலிருந்து பரிணமித்து வந்தன என்ற உண்மையை தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்துக் காண்பித்தார். இந்நூல் விஞ்ஞான உலகத்தின் போக்கையே மாற்றிவிட்டது. ஆனால் வைதிகர்கள் ஆத்திரங்கொண்டு கண்டபடி தூஷித்தனர். டார்வின் யாவற்றிற்கும் பொறுமையுடன் பதிலளித்து வந்தார்.

மனிதவரலாறு.

மேற்கூறிய நூலில் டார்வின் மனிதனைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை. 1871ம் வருஷம் ''மனிதனின் வரலாறு'' (The Descent of man) என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலில் மனிதனும் மற்ற உயிர்களைப்போலவே மிருகங்களிலிருந்து பரிணமித்து வந்தவன் என்ற உண்மையை விளக்கினார். இது கிறிஸ்துமத கொள்கைகளுக்கு முற்றிலும் மாறானது. ஆகையால் வைதீகரின் கோபத்துக்கு டார்வின் இலக்கானார். அக்காலத்தில் ஹக்ஸ்லி (Huxley) முதலிய அறிவாளிகள் டார்வினுக்கு உதவி புரிந்தனர். பின்னால் நடந்த பெரும்போரில் விஞ்ஞானவுலகைப் பரிணாம வாதம் கைப்பற்றிவிட்டது.

பெருந்தன்மை.

டார்வின் தனது வாழ்நாளில் சிறந்தவோர் அறிவாளியாய் விளங்கினதுமல்லாமல், பொருளுக்கும் புகழுக்கும் ஆசைகொள்ளாது நாணயத்தையே பெரிதும் விரும்பினார். உதாரணமாக டார்வின் தனது ஒப்பற்ற நூலை வெளியிடக் காத்துக்கொண்டிருந்தபோது மலாய்நாட்டில் வசித்த ஆல்பிரெட் ரஸ்ஸல் வாலேஸ் என்பவர் டார்வினுடைய பெயரைக் கேள்விப்பட்டு உயிர்களைப்பற்றி தான் எழுதியிருந்த ஒரு

வியாசத்தை டார்வினுக்கு அனுப்பியிருந்தார். டார்வின் அக்கட்டுரையை வாசித்துப்பார்த்தார். தான் வெளியிடுவதற்காக வைத்திருக்கும் உண்மைகள் பல அதில் வரையப்பட்டிருப்பதைக்கண்டார். அக்கட்டுரையை வெளியிட்டால் தனக்கு உண்டாகப்போகும் புகழ் பாதிக்கப்படும் என்ற விஷயம் டார்வினுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் தன்னலங்கருதாத டார்வின் தனது நேரில் கண்டிராத நண்பரின் வியாசத்தில் ஒருவார்த்தைகூடகூட்டாமலும் குறைக்காமலும் பத்திரிகையில் பிரசுரித்தார். மேலும் டார்வின் தனது பெயர் கெட்டுவிடுமென்று தான் எழுதிய நூலையும் வெளியிடாமலிருந்து விடவும் தயாராயிருந்தார். ஆனால் ரஸ்ஸல் வாலேஸும் டார்வினைப்போல வோர் உத்தமர். தன்னைவிட டார்வின் பெரிய அறிவாளி என்றும் ஆகவே புகழெலாம் அவருக்கே உரியது என்றும் கூறிவிட்டார். எங்கும் பொறாமையும் தன்னலமும் குடிகொண்டுள்ள இவ்வுலகில் இப்பேர்ப்பட்ட இரண்டு தியாகிகளைக் காண்டல் அரிதல்லவா?

ஆஸ்திகப்பற்று.

டார்வின் கடைசி வரையில் கடவுள் நம்பிக்கை உள்ளவராகவே யிருந்தார், 1882ம் வருஷம் எப்ரில் மாதம் 19-ந் தேதி இவர் முடிவெய்தினார். பெரிய மனிதர்களைப்புதைக்கும் வெஸ்ட் மினிஸ்டர் ஆபி (West menister abbey) என்னுமிடத்தில் இவருடைய பிரேதம் அடக்கஞ்செய்யப்பட்டது. லண்டனிலுள்ள இயற்கை சரித்திர காட்சி சாலை (Natural History Museum)யில் இவர் உருவச்சிலை வைக்கப்பட்டிருக்கின்றது.

டார்வினுடைய சந்ததியார் இன்னும் இருந்து வருகின்றனர். இவருடைய இரண்டாவது புதல்வராகிய சர். ஜார்ஜ் ஹோவார்ட் டார்வின் ஒரு கணித நிபுணராயும் வான சாஸ்திரியாயுமிருந்து 1912ம் வருஷம் இறந்தார். மற்றொரு புதல்வர் சர். பிரான்ஸிஸ் டார்வின் ஒரு தாவரவர்க்க சாஸ்திரி. இவர் 19--ம் வருஷம் உயிர் நீத்தார்.

டார்வின் மறைந்து விட்டாலும் அவருடைய சித்தாந்தம் இன்னும் வளர்ந்து வருகின்றது. அவர்காலத்துக்குப் பின்பு கண்டுபிடிக்கப்பட்ட பல உண்மைகள் அவர் கொள்கைகளை வலுப்படுத்துகின்றன. இன்று சர். அம்புரோஸ் பிளெம்மிங் (Sir aubrose Fleming) என்னும் கத்தோலிக்க விஞ்ஞானியைத்தவிர, மற்ற எல்லா பிரபல விஞ்ஞானிகளும் பரிணாம வாதத்தை ஒப்புக்கொள்ளுகின்றனர். பிளெம்மிங் ஒரு உயிர்

பொதுவுடைமையும் மதமும்.

(தோழர் ம. சிங்காரவேலு எழுதியது.)

சகல மதங்களும் கற்பனைகள் என்ற முடிவு, மெய்ஞான முடிவென்றே கூறலாம். மதங்களுக்கு ஆதாரமாக வைத்திருக்கும் கடவுளரும், தெய்வங்களும் கற்பனைகளே. இதனை மறுப்பதில் பிரயோஜனமில்லை. பக்திநெறி—முக்தி நெறியில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு இது விளங்காது. விசாரணையில்தான் மதங்கள் கற்பனைகளென்று ஏற்படும். அதுவரையில் மதங்கள் உண்மையெனவே சாமான்ய மக்கள் நம்பிவருவார்கள். பொய்நம்பிக்கையை போக்குவது எளிதில் சாத்தியமாகாது. தொன்றுதொட்டு பல ஆண்டுகளாக கிரமத்திலிருந்து பழக்கச்சொல்லாக வந்திருக்கும் மூடநம்பிக்கைகள் பலவுள. அவ்வித மூடநம்பிக்கைகளில் முக்கிய

சாஸ்திரியல்ல. அவர் மின்சார சாஸ்திரியாவார். "எல்லா உயிர் சாஸ்திர வல்லுநர்களும் பரிணாமத்தை (அதாவது பிராணிகள் ஒரு வர்க்கத்திலிருந்து மற்றொரு வர்க்கம் உற்பத்தியாகின்றது என்ற சித்தாந்தத்தை ஒப்புக்கொள்கின்றனர்" என்கிறார் புரபஸர் ஜூலியன் ஹக்ஸ்லி (Prof. Julian Huxley) என்னும் உயிர் நூலதிகாரி. ஆன்மவாதியாகிய சர். ஆலிவர் லாட்ஜூம் (Sir oliver Lodge) கணித சாஸ்திரத்தால் கடவுளிருப்பதை நிரூபிப்பதாக கூறும் சர். ஜேம்ஸ் ஜீன்ஸூம் (Sir James Jeans) ஒயிட்ஹெட் (White head) எடிங்டன் (Eddington) முதலியோரும், பிஷப்பார்னஸ் (Bishop Barnes) என்னும் பாதிரியாராகிய பிரபல கணித சாஸ்திரியும் பிரபல பாதிரியாராகிய டீன் இஞ் (Dean Inge) என்பவரும் பரிணாமத்தை ஒப்புக்கொள்கின்றனர். கத்தோலிக்கரைத் தவிர வேறு எங்கும் பரிணாமவாதத்துக்குக் குறிப்பிடத்தக்க எதிர்ப்பேயில்லை. ஆனால் காய்தல் உவத்தலின்றி பரிணாமவாத நூல்களை வாசிப்பவர்கள் இப்பூமியில் காணப்படும் உயிர்கள் யாவும் அப்படியே படைக்கப்பட்டன என்பதை மட்டும் ஒப்புக்கொள்ள முடியாது என்பது எனது துணிபு.

மானது, கடவுளர், தெய்வங்களென்ற வார்த்தைகள். இந்த சொற்கள், கற்பனையென்று யாவரும் உணர பல காலமாகும். மெய்ஞ்ஞானம் (Science) பாமர ஜனங்களுக்குள்ளும், தொழிலாளர்களுக்குள்ளும், பரவப் பரவத்தான் மதங்களின் கற்பனை வெளிப்படும்.

பொதுவுடமை சம்பந்தப்பட்ட வரையில் மதங்கள் யாவும் அதற்கு அதீதப்பட்டவைகளே. [அப்புறப்பட்டவைகளே] சமுதாயத்திற்கும் மதங்களுக்கும், ஒற்றுமையோ, அல்லது அனுசரிப்போ யாதும் கிடையாது. ஏனெனில், ஆதி முதல் மதங்கள் யாவும் இவ்வுலக வாழ்க்கையை இகழ்ந்தும் கற்பனை வார்த்தையாகிய அவ்வுலக [மேல் உலக] வாழ்வென்றதைப் புகழ்ந்தும் வந்திருக்கின்றன. பணக்காரர்கள் சார்பாகவே மதங்கள் பெரும்பாலும் உபயோகப்பட்டும் வந்திருக்கின்றன. எந்த சண்டையிலும் இரண்டு கட்சிக்காரர்களும் தங்கள் தங்கள் கடவுளரை உதவி செய்யும்படி பிரார்த்தித்து வருகின்றனர். இத்தகைய மூடத்தனத்திற்கு மதங்களே காரணமாயிருந்து வருகின்றன. கடவுளரும் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வதாகவும் பல புராணங்கள் கூறுகின்றன! நடைமுறையில் வழங்கிவரும் மதக்கிரியைகளும் கோட்பாடுகளும் எளியோரை மூட பக்தியிலேயே அழுத்தி வருகின்றன. இதுவுமன்றி, மதங்கள் யாவும், மெய்ஞ்ஞானம் அடைவதற்கு முட்டுக்கட்டைகளாகவே இருக்கின்றன. மத குருமார்களும், மௌலானாக்களும், புரோகிதர்களும், பல கிரியை விளக்கங்களை எளியோர் மேல் வீணே சுமத்தி, தூபதீபமென்றும், அர்ச்சனையென்றும், தீர்த்தமென்றும், திருவிழா வென்றும், இன்னும் பல விளையாடல்களைக்காட்டி, பல கோடி மனிதரை தெளிவு அடைய விடாமற் செய்து வருகின்றனர். எந்தக்காலத்திலும் எளியோர் இவ்வுலகில் சுகித்து வாழும் வழிகளை மதங்கள் ஆதரிப்பதில்லை. எளியோர் உழைப்பின் பயனை கொள்ளைகொண்டு போகும் வலியோரை, மதங்கள் ஆதரிக்கின்றன. பிரபுக்கள் இன்னும் மகாபிரபுக்களாகவும், ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் மதங்கள் கருவிகளாயிருந்து வருவதன்றியே யொழிய, பொதுஜனங்களை போதுமானவரை உண்டு உடுத்தி இனிது வாழச்செய்வதில்லை, எந்தக் காலத்திலும் மதங்கள் தனவந்தர்களுக்கே சகாயமாய் இருந்து வருகின்றன. சாமான்ய மனிதரை வேடிக்கையார்த்தமாக வாழ்நாளைக் கடக்க மதங்கள் செய்கின்றன. துன்பம் நிறைந்துள்ள இவ்வுலகில் சுகித்து வாழச் செய்வதில்லை. மூட பக்தியை அதிகரித்து வருகின்றன. தெளிவு அடைய விடுவதேயில்லை.

மதங்களின் பிரயோசனமின்மை ஒருபக்கமிருக்க, உலகில் மனிதர் படும்துன்பங்களை அவை அதிகரிக்கச் செய்துகொண்டே

வருகின்றன. மதங்கள் தோன்றியது முதல் மதப்பித்தால் நடந்த யுத்தங்கள் எத்தனை! அடக்குமுறை எத்தனை! கொலைகள் எத்தனை! கொடூரச்செய்கைகள் எத்தனை! பலிகள் எத்தனை! காவுகள் எத்தனை! இத்தியாதிக்கொடூரங்களை கணக்கிட முடியுமோ!! 8000 சமணர்களை கழுவில் எத்தியதும் மதமே! கிறிஸ்துவமதப் போர்களில் கோடி கோடி மாந்தரை மாளவைத்ததும் மதமே!! மகமதிய மார்க்கத்தைப் பரவச் செய்வதில் அநேகரை உயிரிழக்கச் செய்ததும் மதமே!!! இன்றைக்கும் இந்துக்களையும், மகமதியர்களையும் சண்டை செய்து மண்டை யுடைத்துக்கொள்ளச் செய்வதும் மதங்களே!!!! சுருங்கவுரைக்கில் மதங்களால் உலகில் வதைபட்டு மாண்ட மாந்தர் கோடி, கோடி, கோடானகோடியே!!!!

மதங்களால் உண்டாகும் பொருளாதார நஷ்டங்களுக்கு அளவேகிடையாது. கோவில்கள் எத்தனை! விக்கிரகங்கள் எத்தனை! தேர்கள் எத்தனை! தெப்பங்கள் எத்தனை! கோவில்களில் உழைப்பின்றி வாழும் சிப்பந்திகள் எத்தனை! தாசி, வேசிகள் எத்தனை! இவ்வளவு செல்வமும் யாருக்குமே நற்பிரயோசனமின்றிப் போவதைக் கவனித்தால், தொழிலாளர், கிருஷிகள் உழைப்பின் பயன் எவ்வளவு வியர்த்தத்தில் செலவாகின்றதென்பது விளங்குமன்றோ!

இவ்விதமாக வீணே நஷ்டமாகும் செல்வத்தைக்கொண்டு எத்தனை சுகாதார விடுதிகளைக் கட்டலாம்? எத்தனை ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியைக் கொடுக்கலாம்? எத்தனை நந்தவனங்கள், புஸ்தகசாலைகள், காட்சிசாலைகள் உண்டாக்கலாம்? நோயாளிகளுக்கு எத்தனை வசதிகள் ஏற்படுத்தலாம்? பாழடைந்து கிடக்கும் எத்தனை கிராமங்களை சுகவாழ்வுக்கு இருப்பிடமாக்கலாம்? படிக்கத்தெரியாத தொழிலாளர், கிருஷிகளுக்கு எத்தனை கலாசாலைகள் நியமிக்கலாம்? எத்தனை மெய்ஞ்ஞான ஆலயங்கள், எத்தனை ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் ஏற்படுத்தலாம்? பயனற்ற அர்ச்சனைகளுக்கும், உற்சவங்களுக்கும் செலவாகும் பணத்தைக்கொண்டு நிலமில்லாவூரில் செய்கால் நிலங்களை வேண்டியவரை செய்யலாமே! நீரில்லாவூரில் நீர்வளப்பங்களை உண்டாக்கலாமே! உலகத்தோரை ஒரு கேள்வி கேட்கின்றோம். இவ்வுலகில் சரியாக உண்டு. வுடுத்தவழியின்றி கோடான கோடிமாந்தர் பதைக்கின்றார்கள் என்று சொல்லுகின்றீர். உலகவாழ்வுக்குவேண்டிய ஞானமின்றி இன்னும் பல கோடி மக்கள் அறியாமையில் கிடந்து உழல்வதாகவும் கூறுகின்றீர் மனிதகுலம் இவ்வித சீர்கேட்டில் கிடந்து பல்லாயிரம் ஆண்டுகளாக வுழலுங்காலை, இறந்தபிறகு ஏதோ சுகமடையலாமென கோயில்களையும், குருமார்களையும் நியமித்து வருகின்றீர்களே. இது என்ன மடமை?

இவ்வுலக வாழ்விற்கு கோயில்களும், குருமார்களும் உபயோகமில்லையெனில், ஏன் இவை விஷயமாக இவ்வளவு வியர்த்த செலவும், பிரயாசையும்?

மதங்கள் இறந்து விட்டவனுக்கு வழிகாட்டிகளாக இருத்தல் பாதகமில்லையெனினும், இவ்வுலக வாழ்க்கைக்கு அவை கெடுதிகளை விளைவித்துக்கொண்டே வருகின்றன. "அவன் அன்றி ஓர் அணுவும் அசையா" தெனும் கற்பனை வாசகத்தால் மனிதனுடைய முயற்சியும், முன்னேற்றமும், விசாரணையும் தடைபெறுகின்றன. மதக் கற்பனைகளாகிய தெய்வங்களும், பேய், பிசாசுகளும், இருளன், வீரன், காட்டேரி முதலிய சொற்களும் மனிதரை சதா பயத்திலேயே வைத்து வருகின்றன. இருளைக்கண்டு பயப்படுவோர் எத்தனை பெயர்! சுடுகாட்டைக்கண்டு திகைப்படைவோர் எத்தனை பெயர்! மந்திர தந்திரங்களால் மதிமயங்குவோர் எத்தனை பெயர்! இத்தியாதி கற்பனைகளுக்கு மதங்களே ஆதாரமாயிருந்து வருகின்றன.

இவையுமன்றி, மனிதனையும், கால்நடைகளையும் வாட்டி வரும் நோய்களின் காரணங்களையும், அவைகளின் பரிகாரங்களையும் தேட விடாமல் மாரி அம்மனையும், முனீஸ்வரன்களையும் சிருஷ்டித்துக்கொண்டு மனிதர்களைப் படுகுழியில் தள்ளிக்கொண்டு வருகின்றன நமது பல மதங்கள். வாந்திபேதி, பித்தசுரம், அம்மை, வைசூரி, மகாமாரி முதலிய கொடிய வியாதிகளால் நமது இந்தியாவில் மாளுவோர் கோடானு கோடி. இந்த நோய்களின் காரணங்களை மெய்ஞ்ஞானிகள் கண்டுபிடித்து, அவைகளுக்குத் தகுந்த சிகிச்சைகள் செய்யச் சொல்லுகிறார்கள் ஆனால் இந்திய நாட்டிலோ தெய்வங்களாலும் பில்லி சூனியங்களாலும் அந்நோய்களுண்டாகின்றனவென, மதக்குருக்கள் கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டால் அவைகளை நம்பி கோடிக்கணக்கான இந்தியர் கொடுநோய்களால் மாள்கின்றனர். மதங்கள் உண்மையாயின் ஏன் இந்தக்கொடு வாதனைகளை நிறுத்தலாகாது? இவைகளை நம்பி மோசம் போவதும் விவேகமாகுமா? இந்த மதியீனத்தை எடுத்துக்காட்டாத தலைவர்களும் யோக்கியமுடையவர்களாவார்களா? அல்லது சிறந்த பெரியோர்களெனப்படுவார்களா? இதன் விஷயமாக இந்திய நாட்டுத் தலைவர்கள் மௌனம் சாதித்து வருவது பாமர மக்களை வஞ்சித்ததாகாதா?

மதங்களில் உழல்கின்றவர் சோதிடத்திலும், சாதகத்திலும் அதிக நம்பிக்கைவைத்துள்ளார். "சத்தமும் சோதிடமும் என்றாங்கிவை பிதற்றும் பித்தரில் பேதையாரில்" என்ற முதுமொழி

யை உணர்ந்தாரில்லை! வானசாஸ்திர ஞானம் சற்று பாமர ஜனங்களுக்குப் பரவுமேயாகில் நாளும், லக்கினமும் ஒழிந்துவிடும். அவைகளால் உண்டாகும் பயமும் நீங்கும்.

சமுதாய நிலையில் மதங்களின் கதி என்னவென்று கேட்கலாம். விசாரணையில் மதங்கள் முற்றிலும் மனோ ஆலயங்களாக முடிகின்றபடியாலும், மதங்கள் சார்பாகச் செய்யும் சாந்தியும் கிரியையும், கர்மங்களும் பயனற்ற காரியங்களாய் முடிவதோடு மனிதரைப் பல கொடுமைகளுக்கு ஆளாக்குவதாலும், மதங்களில் மூடநம்பிக்கை வைக்க வைக்க மெய்ஞ்ஞான அறிவு வளர்வதற்கு இடமில்லையாதலாலும், இந்தியாதி கேடுகளுக்கு ஆதிகாரணமாய் இருந்து வரும் மதங்களை வேரற வொழித்தலே அவசியமென ஏற்படும். தற்கால உயர்வு தாழ்வுள்ள பொருளாதார நிலைமையை மதங்கள் ஆதரித்து வருவதாலும், மதங்களை யொழிப்பதே அறிஞர்களின் முதல் கடமையாகும். மதவிஷயங்களில் பிரவேசிக்க மாட்டோம் என்பது மனித நல்வாழ்க்கையை அசட்டை செய்வோர் திட்டமாகும். இந்த மனப்பான்மை முற்றிலும் வெறுக்கத் தக்கது.

மேற்போந்த காரணங்களைக் கொண்டே சோவியத் ரஷ்யாவில் அரசு புரிந்துவரும் தொழிலாளர் மதங்களைப் பரவச்செய்யும் முறைகளை நிறுத்தி விட்டார்கள். மதங்களில் குழந்தைகள் பழகலாகாதெனவும் திட்டமிட்டுள்ளார். ஆதலின் ரஷ்ய கோவில்கள் அறிவீனர்களும், உன்மத்தர்களும், வயது தளர்ந்தோறும் ஏகதேசமாகப்போகவேண்டிய ஸ்தாபனங்களேயொழிய பெரும்பான்மையோர் போகும் இடமாகாதென முடிவு செய்யப்பட்டு விட்டது.

உலகம் மதக் கற்பனைகளின்றி பல கோடி வருஷம் நிலைத்து வந்தது. மனிதன் தோன்றிப், பேச ஆரம்பித்ததும் இந்தக் கற்பனா பேச்சைப் பேச ஆரம்பித்தான், இந்தப் பேச்சால்தான் நிகழ்ந்தன மனிதருக்கு உண்டான கேடுகள் பலவும். மதமில்லா உலகம் இனிவரும் உலகமாகும். மதமில்லா உலகம் முதலாளிகளுக்கும், அவர் சார்பினர்களுக்கும் வருத்தமாக யிருக்குமேயொழிய, பல கோடி நூறாயிரம் ஏழைத் தொழிலாளர்களுக்கு ஓர் பொருத்த "சனி" (உபத்திரவம்) ஒழிந்ததாகும். தொழிலாளரையும், கிருஷிகளையும் வஞ்சித்து ஏமாற்றி அவர்கள் சுகவாழ்வைக் கெடுத்துவரும் மதங்கள் இருந்தென்ன? போயென்ன? இதுதான் பொதுவுடைமையில் மதத்தின் நிலைமை.

மெய்யாகவே ஒரு கடவுளுண்டா?

(எம். ஜே. காவின்.)

உலகம் தோன்றியது முதல் மிகச் சமீப காலம் வரை மனித சமூகத்தின் சக்தி முழுதும் கடவுள் வழிபாட்டிலேயே பாழாக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தக்கடவுள்கள் எல்லாம் இயல்பாக உண்டாக்கப்பட்டவர்களே. இந்தக் கடவுள்கள் எல்லாம் மக்களின் மனோ கற்பனையினால் தோற்றுவிக்கப் பட்டவர்களே. மக்கள் கடவுள்களை யுண்டுபண்ணி, பிரபஞ்சத்தோற்றத்துக்கு அவர்கள் மூலம் காரணம் கண்டனர். தன்னைச்சுற்றி நிகழும் பல சம்பவங்களுக்கு சாதுவான காட்டாளனுக்குக் காரணம் காண முடியவில்லை, இயற்கை விதிகளையோ, ஒழுங்குகளையோ, காரண காரியங்களையோ அவன் அறியான். எனவே அவன் கண்ட காட்சிகள் அவனது உள்ளத்துப்பெரும் பீதியை உண்டுபண்ணின. காற்றின் இரக்கமான அழுகையும், இடியின் பயங்கர முழக்கமும், கண்ணைக்குருடாக்கும் மின்னலின் ஒளியும், காட்டை அழிக்கும் ஜலப்பிரவாகமும், மக்களை உருக்குலைக்கும் நோய்களும், தனது அன்புக்குப் பாத்திரமானவர்களின் உயிரை மாய்க்கும் மரணமும், சிலதீய சக்திகள் இருப்பதாகவும் அவை அவனை அழிக்க வேலை செய்து வருவதாகவும் ஒரு நம்பிக்கையை அவனது உள்ளத்து உண்டுபண்ணின.

ஆனால் அவனுக்கு அனுகூலமான வேலைகளைச் செய்யும் சக்திகள் இருப்பதாயும் அவன் உணர்ந்தான். சூரியனின் மனோகரமான வெப்பமும், சந்திரனின் சாந்த ஒளியும், கோடைகாலத்துப்பெய்யும் மனோகரமான மழையும், ஏராளமான கடல் படு மலை படு பொருள்களும் அவன் அனுபவிக்கும் சுகமும் மகிழ்ச்சியும்—பிரபஞ்ச சக்திகளில் பல அவனது உற்ற நண்பர்களாயிருக்கின்றன என்ற உணர்ச்சியையும் அவனது உள்ளத்திலே தோற்றுவித்தன.

எனவே தனக்கு அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும் உள்ள சக்திகளுக்கு அவன் உருவம் கற்பித்தான். கடவுள்

கள் தோன்றிய வரலாறு இதுவேயாகும். காட்டாளன் உள்ளம் வானிலும் மண்ணிலும் நண்பர்களையும் சத்துருக்களையும் நிரப்பி வைத்தது. தனக்கு நன்மை செய்வன வெல்லாம் நண்பன்-கடவுள் என்றும், தீமை செய்வன வெல்லாம் சத்துரு-பேய் என்றும் அவன் கற்பனை செய்து கொண்டான். அவனுக்கு எதுவும் இயல்பாகத் தோன்றவில்லை. எல்லா சம்பவங்களுக்கும் ஒரு தெய்வீக காரணமிருப்பதாக உணர்ந்தான். உலக முழுதும் அற்புதங்களும் அதிசயங்களும் நிரம்பின. யாவும் கடவுள்கள் அல்லது பேய்களின் திருவிளையாடல்களாயின.

அறிவு வளர்ச்சியின் ஒரு கட்டத்திலே, உலக முழுதும் இத்தகைய நம்பிக்கைகள் பொதுவாக இருந்தே வந்திருக்கின்றன. தற்காலத்திய காட்டாள ஜாதியாருக்குக் கூட காற்றும் வானமும் சூரியனும் கடலும், உருவும் உயிரும் உடையவைகளாகவே இருக்கின்றன. இயற்கை சக்திகளை அவன் கடவுளாளாக்கிக் கொண்டதுமன்றி, பல இறப்பட்ட பறவைகளையும் விலங்குகளையும் கூட தெய்வங்களாகப் பாவித்து அவன் வணங்கி வந்தான். திரிங்கத்து இந்தியர்கள் பசுவைத் தெய்வமாக வணங்கி வருகிறார்கள். வடபோர்னியோ மக்கள் பருந்தைத் தெய்வமாகத் தொழுது வருகிறார்கள். ஆபிரிக்காவிலுள்ள பிஜாகீஸ் வகுப்பார் ஆட்டைத் தெய்வமாக மதித்து வருகிறார்கள். மேற்கு ஆசியாவிலுள்ள யோசாரி ஜாதியார் நாயை வணங்குகிறார்கள். மேற்கு ஆபிரிக்காவிலுள்ள பல ஜாதியார் சிவிங்கிப் புலியை தெய்வமாக மதிக்கிறார்கள். சைபீரியாவிலுள்ள சில வகுப்பார் கரடியைத் தொழுது வருகிறார்கள். இந்தியர்கள் வானரத் தலைவனான ஹனுமானை வணங்குகிறார்கள். சியத்திலே வெள்ளை யானை தெய்வாம்சம் பொருந்திய பிராணியாக மதிக்கப்பட்டு வருகிறது. வெள்ளை யானையில் புத்தரின் ஆத்மா தங்கியிருப்பதாக நம்பப்படுகிறது. பெசிபிக் தீவுகளிலுள்ள மக்கள் அருவருப்பான பல்லியையும் கூட வணங்குகிறார்கள். உலகத்தின் பல பாகங்களில் பன்னூற்றாண்டு காலம் சர்ப்ப வணக்கம் அமலில் இருந்து வந்தது. காட்டாளர் மட்டும் கீழ்த்தரப் பிராணிகளை கடவுளாக வணங்கி வரவில்லை. புராதன நாகரிகத்தில் பெயர் பெற்ற எகிப்தியரும் கூட ஆபிஸ் என்ற எருதை வணங்கி வந்தனர். அந்த ரிஷபக் கடவுளுக்கு வெள்ளை எருதுகளை பலியிட்டு வந்தார்கள். அந்த ரிஷபக்கடவுள்

மக்களுக்கு தெய்வீக சக்தியை அளிப்பதாக எகிப்தியப் பூசாரிகள் நம்பினர். அந்த எருது இறந்த பிறகு அதைத் தைலமாட்டி மலைக் குகைகளில் சமாதி வைத்து வந்தனர். அதற்கு பதிலாக வேறொரு எருதை வணங்கி வந்தார்கள்.

காட்டாளனாயிருந்த மனிதன் அறிவு விருத்தியாகி நாகரிகம் அடைய அடைய கடவுள்களின் குணங்களும் விருத்தியாகிக்கொண்டு வந்தன. மனிதனுக்கு மேலான ஒரு பிராணியை மனிதனுக்குக் கற்பிக்கவும் முடியாது. எனவே மனித வடிவத்திலேயே கடவுள்களும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

எகிப்தியர்களுக்கு ஓசிரிஸ் என்ற கடவுளே தேவ தேவனாக விளங்கினான். சில சமயங்களில் அவனைச் சூரியனாகவும், சில சமயங்களில் நீல நதியாகவும், சில சமயங்களில் தலையில் ஒரு கிரீடத்தையோ, பூகோளத்தையோ, தாமரை மலரையோ அணிந்துகொண்டிருக்கும் ஒரு மனிதனாகவும் பாவித்து எகிப்தியர் வணங்கி வந்தனர். அவனது மனைவி ஈசிஸ்தேவி; அவள் ஹோரசின் தாயார். பல்லாயிர வருஷங்களாக எகிப்தியர் அவளை வணங்கி வந்தனர்.

இந்தியாவிலே, சிருஷ்டிகர்த்தாவான பிரம்மா நான்கு முகமும் நான்கு கைகளும் உடையவனாக கற்பனை செய்யப்பட்டிருக்கிறான். நான்கு கைகளிலும் நான்கு வேதங்களைத் தாங்கிக்கொண்டு இருக்கிறானாம்.

கிரேக்கக் கடவுளான ஜூபிஸ் மனித உருவமுடையவனே. அவன் மக்களுக்கெல்லாம் தந்தையாம்; தெய்வங்களுக்கெல்லாம் தலைவனாம்—தேவாதி தேவனாம். ஏழை எளியோர்களையும், குடும்பங்களையும் தேச மக்களையும் காப்பாற்றுவதில் அவன் அதிக சிரத்தை காட்டி வந்தானாம். அவன் மனைவி பெயர் ஹேரா; மற்றும் பல தேவிமாரும் மண்ணுலகப் பெண்களும் அவனுக்கு வைப்பாட்டிகளாகவும் இருந்தனராம்.

ஜூபிட்டர் என்ற கடவுளை ரோமர்கள் சர்வ வல்லமையுள்ள உத்தமக் கடவுள் என மதித்து வணங்கி வந்தனர். அவனது சர்வ சக்திக்கு அறிகுறியாக அவன் கையில் ஒரு செங்கோல் தாங்கிக் கொண்டுஇருந்தானாம். சுவர்க்க ராணியான ஜூனோ அவனது மனைவி. அவர்களிருவரும் ரோமர்க

ளின் சொத்துக்களையும் உயிரையும் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்தார்களாம். பிடியாஸ் என்ற சிற்பி தந்தத்தாலும் பொன்னாலும் அமைத்த ஜுபிட்டர் ஒலிம்பஸ் சிலை ரோமர் கலை ஞானத்துக்கு ஒருமணி முடியாக விளங்கி வருகிறது. இந்தப் பெரிய கடவுள்களுக்குக் கீழே பல குட்டித் தெய்வங்களும் இருந்து வந்திருக்கின்றன. மக்களின் குணங்கள், கோபதாபங்கள், ஆசாபாசங்களுக்குக் கூட தெய்வ உருக்கொடுக்கப் பட்டிருக்கின்றன. மக்கள் முயற்சியின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு கடவுள் தலைமைவகித்தும் வந்திருக்கிறான்.

இந்தக் கடவுள்களுக்கெல்லாம் கம்பீரமான கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன; பகட்டான உடைகளணிந்த பூசாரிகள் இந்தக் கடவுள்களுக்குப் பூசை செய்து வந்திருக்கிறார்கள். ஆலயச் சடங்குகளும் வழிபாடுகளும் அந்தப் பூசாரிகளே நடத்தி வந்திருக்கிறார்கள்; தேவகண மண்டலத்தில் அவர்களது லீலைகளே பிரதானமாக விளங்குகின்றன. அவர்களுடைய காதல்கள், வெறுப்புகள், போட்டிகள் நல்ல—தீய செயல்கள் எல்லாம் புராணங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் உண்மையென நம்பி லக்ஷோபலக்ஷ ஜனங்கள் அவர்களை வணங்கி வந்தனர். உயரிய நாகரிகமடைந்த மக்கள் இவ்வளவாய்ப் பன்னூற்றாண்டு காலம் ஏமாற்றப்பட்டு வந்திருப்பது நம்பமுடியாத ஒரு விந்தையாகவே இருந்து வந்திருக்கிறது. பகுத்தறிவுள்ள மக்கள் முதலில் கடவுள்களையுண்டு பண்ணி அப்பால் அவைகளுக்கு அடிமைப்பட்டு வணங்கி வந்திருப்பது பெரு விந்தையாகவே இருக்கிறது.

எனினும் அது உண்மையே. பல பொய்க் கடவுள்களின் பேரால், பூசாரிகள் வரங்கள் கொடுத்திருக்கிறார்கள்; சபித்திருக்கிறார்கள். பூசாரிகள் கட்டளைக்குக் கட்டுப்பட்டு இந்தப் போலித் தெய்வங்களுக்கு லக்ஷோபலக்ஷம் ஜனங்கள் தங்கள் ஆடுமாடுகளையும் அருமைக்குழந்தைகளையும் தமது சுதந்தரத்தையும் ஜீவனையும் பலியிட்டிருக்கிறார்கள். மத சரித்திரத்தைப்போல் கொடுமையானது—துன்பம் தரத்தக்கது வேறு எதுவுமே இல்லை. மனிதன் உண்டுபண்ணிய கடவுளை மனிதனே வணங்கியதைவிடக் கொடிய துன்பமும் வேறே இல்லை.

கடவுள் உணர்ச்சி மக்களின் கற்பனையானால்—பிரபஞ்ச சக்திகளைக் காட்டாளர் கடவுளாகப் பாவித்தது தப்பானால்

கவிராயர்களும் பூசாரிகளும் கற்பித்த கடவுளைப் பண்டைக்கால வீர மக்கள் வணங்கினரார்களானால், யூதர்கள் ஜிஹோவாவை வணங்கியது ஏன் தப்பாக இருக்கமுடியாது? கிரேக்க அறிவாளிகள் வணங்கிய ஜூபியிஸ் என்ற உத்தமக்கடவுள் கவிகளின் கற்பனைக்கடவுளானால், முட்டாள்களான யூதர் வணங்கிய கடவுள் மட்டும் ஏன் உண்மைக்கடவுளாக இருக்கவேண்டும்? ரோமசாம்ராஜ்யப்படையை வெற்றிகரமாக நடத்திக் கீர்த்திபெற்ற ஜூபிட்டர் என்ற கடவுள் ஒரு கற்பனைக்கடவுளானால், காட்டாள அடிமைகள் வணங்கிய கடவுள்தான் பிரபஞ்ச கர்த்தா, உண்மைக்கடவுள் என்பதற்கு ஆதாரமென்ன?

ஜிஹோவா ஒரு சில நாடோடி ஜாதியாரின் கடவுள். அந்த ஜாதியார் கடைசியில் பாலஸ்தீனாவில் குடியேறினர். பாலஸ்தினா மலைகளும் பாறைகளும் பாலைவனங்களும் நிறைந்த பிரதேசம். அவர்களுக்குக் கலைகளோ, விஞ்ஞான நூல்களோ, வர்த்தகமோ கிடையா. அவர்களுக்கு கப்பல்களும் இருக்கவில்லை; ஒரு கொள்ளைக்கூட்டமே அவர்களுடைய படை. அப்படை பெண்களையும் குழந்தைகளையும் அநியாயமாகக் கொலைபுரிந்து வந்தது. அவர்கள் கேவலமான குடிசைகளிலும் கூடாரங்களிலும் வசித்து வந்தனர். அவர்களுக்கு கல்லூரிகளும் இல்லை; பள்ளிக்கூடங்களும், ஒழுங்கான கல்விமுறையும் இல்லை, பன்னூற்றாண்டு காலம் அவர்கள் எழுதத்தெரியாமலும் இருந்தார்கள்; எனவே அவர்களுக்கு இலக்கியங்களும் இருந்ததில்லை. அவர்கள் முரடர்களாயும் வஞ்சர்களாயும் கொடியர்களாயும் இருந்தனர், பயங்கரமான மூடநம்பிக்கைகளுக்கும் உறைவிடமாயிருந்தார்கள். தமது கற்பனைக்கடவுளைத் திருப்தி செய்யும் பொருட்டு நெடுநாள் அவர்தம் புத்திரர் புத்திரிகளையும் பலிகொடுத்து வந்தார்கள். அப்பால் ஆடுமாடுகளையும் புறாக்களையும் பலியிட்டுக் கடவுள் அருளைப்பெற முயன்றார்கள். நாகரிகம் வாய்ந்த பலஜாதியார் மத்தியில் வாழ்ந்திருந்தும் யூதர்கள் அக்காலத்து காட்டுமிராண்டிகளாயிருந்து வந்ததாகவே தெரியவருகிறது.

யூதர்களின் மதம் அவர்களைக் குறுகிய நோக்கமுடையவர்களாயும் மதவெறியுடையவர்களாயும் ஆக்கிவிட்டது. தாமே கடவுளின் செல்வக்குழந்தைகள் என்று மனப்பால் குடித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் எல்லாம் கடவுள்சாபத்துக்கும் கோபத்துக்கும் ஆளானவர்கள் என மதித்தார்கள். எனினும்

இங்கர்சாலும் சமதர்மமும்.

(சௌ. ரா.)

கவனிக்க வேண்டியது.

ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டிய விஷயத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு மனிதன் இறக்கும்பொழுது தனது பெண்டு பிள்ளைகளை ஜன சமூகத்தின் கொடுமைகளுக்கு ஆளாகுமாறு விட்டுச் செல்லுகிறோமே என்று வருந்தாமல் இன்பமுடன் கண் மூடுகின்றானோ அப்பேர்ப்பட்டவர்களை இவ்வுலகத்தில் நான் காண விரும்புகின்றேன். ஒருவருக்கும் அதிகமில்லாவிட்டால் எல்லோருக்கும் போதுமானவைகளிருக்கும். எந்த அரசாங்கத்தில் அரும்பாடுபடுபவர்கள் அற்பமானதை அடைகின்றார்களோ, அந்த அரசாங்கத்தில் அதிக தவறுதல் இருக்கிறது. யோக்கியமானவர்கள் கந்தையைக்கட்டுகிறார்கள்; பதர்கள் பட்டாடை உடுத்துகிறார்கள். தலை உள்ளவர்களும் இரக்கமுள்ளவர்களும் கூழைக்குடிக்கிறார்கள்; இவைகளில் எவ்வளவு தவறுதல் இருக்கிறது. என்னால் ஒன்றும் செய்ய இயலாது; ஆனால் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்து நான் அனுதாபப்படக்கூடும்.

நீ அதைச் செய்ய விரும்புவது அவர்களுக்காக மட்டுமன்று; உனக்காகவுமாம். ஏனெனில் இந்த உலகத்திலேயே

அவர்கள் எப்பொழுதும் வலிபொருந்திய தேசத்தாரின் அடிமைகளாகவே இருந்து வந்தனர். மற்றவர்கள் சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று வாழ்ந்தும் யூதர்கள் வறியராய்—எளியராய் யாவராலும் இகழப்பட்டு வந்தனர். இதற்கெல்லாம் காரணம் அவர்களது மதமே. அவர்களது மதம் அவர்களுக்கு ஒரு சாபத்தீடாகவே முடிந்தது. எனவே அப்பேர்ப்பட்டவர்கள் கடவுள் மட்டும் ஏன் மெய்யான கடவுளாயிருக்க வேண்டுமென்று மீண்டும் நான் கேட்கிறேன்.

(இதன் மற்ற பாகங்களை மெய்யாகவே ஒருகடவுள் உண்டா? என்ற புத்தகத்தை வாங்கிப்பாருங்கள்.)

துக்கமான மனிதன் ஒருவனிருந்தாலும் நாகரிகமுற்றவன் சந்தோஷமாக விருக்க முடியாது.

"இது மிலேச்ச உலகம், இங்கே கஷ்டப்படும்படி நடந்து கொண்டால் மற்றொரு உலகத்தில் நன்மையுண்டு. இவ்வுலகத்தில் தன்னலத்தை மறுத்திருந்தால் மற்றொரு உலகத்தில் நன்மையடையலாம்; கொலையைத் தவிர்த்திருந்தால் இழிவான காரியங்களை நீக்கியிருந்தால் மற்றொரு உலகத்தில் தன்னய மறுப்புக்காக சுற்கதியடையலாம்" என்ற கொள்கைக்கு முற்றிலும் மாறானது என் கொள்கை. பிறரை நேசிப்பதால் நீ உன்னையே நேசிக்கிறாய் உன்னையே நேசிப்பதால் நீ தன்னலத்தை மறுக்காதே, தயாளகுண முடையவனாயிரு; ஏனெனில் அது உனக்கு நன்மை பயக்கும்; நியாயமாயிரு; ஏனெனில் மற்ற வழிகள் உனக்கே துன்பத்தை விளைவிக்கும். கெடுதல் செய்கின்றவன் தன்னையே கெடுத்துக்கொள்கிறான்.

உண்மையான நாகரிகம்.

நீ உள்ளபடியே நாகரிகமுற்றவனாயிருந்தால் நீசந்தோஷமாகவிருக்க விரும்பினால் நீ பிறரையும் சந்தோஷமுள்ளவர்களாகச் செய்வாய். தன்னுடைய இன்பத்தைப்பெருக்குவதற்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்றமட்டும் பிறருடைய இன்பத்தை வளர்க்க வேண்டும். சுற்றத்தவர் சுகமாக வாழ்ந்தாலன்றி ஒருவன் சுகமாக வாழமுடியாது. பெரும்பாலான மக்கள், பணக்காரர்களெல்லாம் வைகுண்டத்தில் இருப்பதாக எண்ணுகிறார்கள். ஆனால் அது அவர்களுக்கு நரகமே. இந்த நகரத்தில் (நியூயார்க்கில்) ஐந்து கோடி ரூபாய்களை வைத்துக்கொள்ளுவதற்குத்தகுந்த அறிவுள்ளவர்களும் விவேகமுள்ளவர்களும் ஒருவருமே கிடையாது. ஏன்? பணம் அவர்களை வைத்திருக்கிறது. அவன் பெட்டிக்கு சாவியாயிருக்கிறான். அந்தப்பணம் அவனை அதிகாலையில் எழுப்பி விடுகிறது. அந்தப்பணம் அவனை அவனுடைய சிநேகிதர்களிடமிருந்து பிரித்துவிடுகிறது. அந்தப்பணம் அவனது இருதயத்தில் பயத்தை உண்டுபண்ணுகிறது. அந்தப்பணம் அவனது சுகத்தையெல்லாம் அறவே நீக்குகிறது. அவன் பணத்தை வைத்துக்கொள்ள முடியாது. பணம் அவனை வைத்துக்கொள்ளுகிறது. அவன் பணத்தினுடைய சொத்தாகி விடுகிறான். அவன் மேலும் மேலும் பணம் சம்பாதிக்கிறான். எதற்காகவெனில் அது அவனுக்

குத் தெரியாது. இதுவே புத்திக்குறைவான பைத்தியக்காரத்தனம். ஒரு குடிசையில் உள்ளவர்களை விட அரண்மனையில் வாழ்வோர் சுகமாகவிருப்பதில்லை. மரக்கட்டைகளால் கட்டப்பட்ட வீட்டை நான் பெரிதும் விரும்புகின்றேன். அது எனக்கு அதிக ஆனந்தத்தை அளிக்கிறது; உலகத்தில் ஒற்றி வைத்தல் முதலிய விவகாரங்களில்லாத வீடு அது ஒன்றேயாகும். என்றுமில்லா இன்பத்தை நீங்கள் அங்கே அனுபவிக்கலாம்.

வேண்டியதை விட அதிகமாகப்பெற்றுக்கொள்வது மடத்தனமாகும். இந்த நகரத்தில் ஒரு மனிதன் அறிவாளி எனவும் வைத்துக்கொள்ளுங்கள். கோடிக்கணக்கான உடுப்புகளையும், வீடுகளை நிரப்பக்கூடிய செருப்புகளையும் வைத்துக்கொண்டிருக்கிறான் என்று எண்ணிக்கொள்ளுங்கள். அதிகாலையில் எழுந்து ஒரு உடைக்காக உழைப்பவனையும் நினைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுதும் நான் சொல்லியது போல பெரும் பணக்காரர்களெல்லாம் செய்கிறார்களல்லவா? தன்னை ''பெரியபணக்காரன்'' என்றுசொல்ல வேண்டுமென்று அவன் சதா உடுத்திக்கொண்டிருக்கிறானல்லவா? எஞ்சியதை அவன் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது. அதை சாப்பிட முடியுமா? முடியாது; சிநேகிதர்களை சம்பாதிக்கமுடியுமா? முடியாது; பொய்யையும் முகஸ்துதியையும் சம்பாதிக்க முடியுமா? முடியும். எளிய உற்றாரையெல்லாம் விரோதிகளாக்க முடியுமா? முடியும். முடிவில் அவன் துன்பப்பட்டு மனமொடிந்து பைத்தியங்கொண்டு இறந்தானென்று தினசரி பத்திரிகைகள் சொல்லும்.

செல்வம் ஒரு சாபம்.

ஆகையால் நமது குழந்தைகளுக்கு நாம் 'பெருஞ் செல்வம் பெரியசாபம்' என்று போதிக்க வேண்டும். செல்வமே குற்றங்களுக்கும் கொடூரங்களுக்கும் தாய். மற்றொரு பக்கம் அநாதியான ஏழைகளிருக்கிறார்கள். நான் உங்களை இப்பொழுது ஒன்று கேட்கிறேன்; முற்காலத்திலிருந்த மாதிரி உலகம் என்றும் இருக்கவேண்டுமா? எப்பொழுதும் கோடிக்கணக்கான மக்கள் பஞ்சத்தினால் வாடவேண்டுமா? எப்பொழுதும் ஏழைமக்கள் இரந்து உண்ணவேண்டுமா? பெரிய விருந்துகளுக்குச் செல்பவன் பட்டினி கிடப்பவர்களை நினைத்துக்கொண்டிருக்கவா வேண்டும்? பணக்காரர்கள் ஏழைகளிலிருந்து பிரிக்கப்படவா வேண்டும்? சுகமாக வாழ்பவர்கள்

கஷ்டப்படுகிறவர்களை நினைத்துக்கொண்டிருக்கவா வேண்டும்? மக்களுக்குள் பிரிவினை நாளுக்கு நாள் அதிகப்படுகிறது. இந்தப்பிரிவினைக்கு ஒரு காரணமிருக்கிறது. இந்த ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பட்டணங்களிலும் நாகரிகமான பாகம் என்பதையும், ஏழைகளின் பாகம் என்பதையும் காணலாம். ஏழை மக்களுக்கு வெளித்தோற்றத்தையல்லாமல் நாகரிக பாகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. அவர்கள் பெரிய மாட மாளிகைகளைக் கண்ணுறும் பொழுது அவர்கள் மனதில் பொறாமை தோன்றுகிறது. பணக்காரர்களுக்கு ஏழைகளுடைய கந்தைகளும் கஷ்டங்களும் தான் தெரியுமே ஒழிய ஏழைகளைப் பற்றி அவர்களுக்கு வேறொன்றும் தெரியாது. அவர்கள் "ஏழையாகப் பிறக்கவில்லையே" என்று கடவுளை வணங்குகின்றார்கள். இவர்கள் மனதில் ஈனமும் நிந்தனையும் குடிகொண்டிருக்கின்றன. எளியவர்களும் பணக்காரர்களும் ஒன்று சேர ஒருவழி கண்டுபிடிக்கப்படவேண்டும். ஏழைகளுக்கு, பட்டாடை உடுத்தியவர்களில் எத்தனை பேர் தங்களுக்காக அனுதாபப்படுகிறார்கள் என்பது தெரியாது. பணக்காரர்களுக்குக் கந்தையைக்கட்டியிருப்பவர்களில் எத்தனைபேர் குணசீலர்கள் என்பது தெரியாது. அன்புள்ள ஏழைகளையும் அனுதாபமுள்ள பணக்காரர்களையும் ஒன்று சேர்க்க வேண்டும்.

இது ஒன்று மட்டுமல்ல; இன்னும் நூற்றுக்கணக்கான வழிகளில் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். மனித வர்க்கத்தை ஒன்று சேர்ப்பது பொதுவான கொள்கையாக விருக்கவேண்டும். முகம்மதியர்கள் அனைவரும்ஒன்றாக உட்கார்ந்துகடவுளைவணங்கலாம். ஆனால்நம் கதிஎன்ன? கோவிலில் சுயேச்சை யில்லை. பணக்காரர்கள் ஏழைகளிலிருந்து மதத்தால் பிரிக்கப்படுகிறார்கள். நான் மதத்திற்கு விரோதமாய் ஒன்றும் சொல்லவில்லை. நமது விஷயம் அதுவல்ல. எந்தமதம் வாரத்தில் ஒரு நாளாவது அல்லது வருஷத்தில் ஒரு மணியாவது ஏழைகளையும் பணக்காரர்களையும் ஒன்று சேர்க்கிறதோ அந்த மதத்தை நான் நன்கு மதிப்பேன். அநாகரிகமான காலமென்று சொல்லப்படுகிற முற்காலத்தில் வாழ்க்கை நடத்துவது சுலபமானதாக விருந்தது. இப்பொழுது வாழ்க்கையோ ஒரு பெரிய கஷ்டமாகி விட்டது. வாழ்க்கைக்காகவே பல் வேறு துறைகளில் மனிதர்கள் போராடுகின்றார்கள். அவர்களின் முயற்சி மிகவும் கடினமானது. நாம் உயர உயர தவறுதல்கள் அதிகமாகின்றன. ஆகையால் தான் எல்லா மனிதர்களும் சுகமாக வாழமுடியவில்லை. அவர்கள் மற்றவர்

களைப்போல தந்திரமுள்ளவர்களாக வில்லை, அறிவுள்ள வர்களாகவில்லை, வலிமையுள்ளவர்களாகவில்லை. அவர்கள் அதிக நயாளகுணமுள்ளவர்களாக விருக்கிறார்கள், அல்லது அதிக யோமுகமாய் இருக்கிறார்கள். சிலமனிதர்கள் 'துர் அதிர்ஷ்ட' முள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

இயந்திரங்கள்.

வாழ்க்கையே ஒரு பெரிய கஷ்டமாகி விட்டதாலும் ஒவ்வொருவரும் அதை அடைய முயற்சிப்பதாலும் அறிவுள்ள வர்கள் சுலபமான வழிகளைக் கண்டுபிடிக்க முயலுகின்றனர். வேலையைக் காப்பாற்றுவதற்காக எவ்வளவோ இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இயந்திரங்கள் தொழிலைக் காப்பாற்றினால் இந்த உலகம் எவ்வளவு சந்தோஷமாகவிருக்கும். தொழில் இயந்திரத்தை நடத்துவதில்லை. இயந்திரம் தொழிலை நடத்துகிறது. பழைய காலத்தில் பட்டிணங்கள் எல்லாம் எங்கிலுமிருந்தன. அப்பொழுது ஒரு கொல்லன், இரண்டு தச்சன், இரண்டு மூன்று சக்கிலியர் இருந்து வந்தார்கள். அக்காலத்தில் கடைகள் எல்லாம் எவ்வாறு தோன்றியன. கொல்லர்கள் அதிகாலையில் எழுந்து லாடம் அடிக்க வேண்டுமென்று பேசிக்கொள்வார்கள். வேலை செய்யும் பொழுது கதைகள் சொல்வது வழக்கம். அக்காலத்தில் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்களாயிருந்தார்கள். பொருள் இல்லாவிட்டால் சக்கிலியர்கள் செருப்புத் தைத்து பொருள் சம்பாதிப்பார்கள். இதே விதமாகத்தான் தையற்காரரும், கொல்லரும் செய்வார்கள். அவர்கள் கடனில்லாமல் சுகமாக வாழ்ந்து வந்தார்கள், இப்பொழுது செருப்புத் தைப்பவர்கள் ஒருவருமில்லை, ஒரு பெரிய கட்டிடத்தில் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெருமானமுள்ள ஒரு இயந்திர மிருக்கிறது. அதில் லட்சக்கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள். ஒரு இயந்திரம் தைக்கிறது; ஒன்று வெட்டுகிறது ஆனால் இயந்திரம் நின்று விட்டால் அவ்வளவு பேருக்கும் வேலையில்லை. நம்பிக்கை போய்விடுகிறது, பிறகு வறுமையும் பஞ்சமும் வருகிறது. அவர்களின் குழந்தை இறந்துவிடுமானால் அதைப்புதைப்பதற்கு அவர்கள் பலநாள் வேலை செய்யவேண்டும். ஆனாலும் இந்த இயந்திரத்தால் எண்ணில்லாத பொருள்களைச் செய்யலாம். எண்ணில்லாத பொருள்கள் செய்யப்பட்டாலும் கணக்கில்லாத இயந்திரங்கள் இருந்தாலும் கோடிக்கணக்கான மக்கள் வறுமையால் வாடுகின்றார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் பஞ்சத்தின் கஷ்டம்

பெருகுகிறது; ஒவ்வொருவரும் கஷ்டப்படுகின்றார்கள். இங்கே ஏதோ பிசகு இருக்கிறது. மனிதர்களுக்கும் இயந்திரங்களுக்கும் உள்ள போராட்டம் அதிகமாகிறது

எந்த விஷயங்கள் மக்களுக்கு சுகத்தை உண்டுபண்ணவில்லையோ, எவை நம்மையும் நமது குழந்தைகளையும் காப்பாற்றவில்லையோ அவைகளை நாம் ஒதுக்கித்தள்ள வேண்டும், அவைகளில் நமது கவனத்தைச் செலுத்தக் கூடாது.

ஆதலின் இவ்விஷயங்களை நாம் ஆலோசித்து ஒவ்வொரு மனிதனுக்கும் நியாயம் வழங்கப்படுகிறதா என்று நாம் பார்க்க வேண்டும். இந்த ஐக்கிய மாகாணத்திலுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்காகவே நான் அனுதாபப்படுகிறேன். என்னை நன்றாக அறிந்துகொள்ளுங்கள். நான் அராஜகத்தைப் போற்றுபவனல்ல; அராஜகமானது கொடுங்கோன்மையின் பலனாகும். நான் சீர்திருத்தக்காரனல்ல; நான் பொதுவுடமைக் கட்சியையாவது சுபிட்சைக் கட்சியையாவது சேர்ந்தவனல்ல. அரசாங்கத்தின் கொடுமைகளை நான் நம்பாவிட்டாலும் மனிதர்களுக்குள் வழங்கப்படும் நியாயத்தை நான் நம்புகின்றேன்.

உலகம் மக்களின் பொது சொத்து.

பரிகாரம் என்னவென்று நாம் ஆலோசிக்கமுடியுமா? நான் அறிந்தவனென்று சொல்வதாக எண்ணிக்கொள்ளாதீர்கள். இது ஒரு பெரிய விஷயமாயிருந்தாலும் நாம் ஆலோசித்துப் பார்க்கலாம். சமீபத்தில் நில சம்பந்தமாக நீங்கள் அதிகம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல என்னை அநுமதியுங்கள். பிறருக்குச் சொந்தமான ஒரு அங்குல நிலத்தைக் கூட நான் எடுத்துக்கொள்ளமாட்டேன். உபயோகப்படுத்தாத நிலத்தை ஒருவன் வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் இதை அறிவார்கள். எனக்கு அதிக நிலங்களிருந்தன. எனக்கு உபயோகப்படக்கூடாத நிலங்களை நான் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. ஏன்? காற்றை சீசாக்களில் அடைக்க முடிந்தால் மனிதர்கள் அடைத்துவிடுவார்கள். அப்போது அமெரிக்காவில் காற்றடைக்கும் சங்கம் ஒன்று ஏற்படும். அதன் பிறகு மூச்சு விட வேண்டியவர்கள் பணம் கொடுத்து காற்றை வாங்கவேண்டும். இவைகளெல்லாம் சாத்தியமானால் நடக்குமென்பது உங்களுக்குத் தெரியாதா? நான் ஒருவரையும் தூற்றவில்லை; நான் உண்மையைச் சொல்லுகிறேன்.

உலகத்திலுள்ள நிலங்களெல்லாம் இயற்கை அன்னையின் புத்திரர்களுக்குச் சொந்தமானது. இயற்கை அன்னை பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் வரவேற்கிறது. நான் உங்களை எல்லாம் இங்கே அழைக்கிறேன். ஆனால் நீங்கள் இங்கே வந்த உடனே ஒருவன் நூறு நாற்காலிகளை தன்னுடையது என்று பிடித்துக் கொண்டால் நீங்களெல்லாம் நிற்கவேண்டியவர்களாகி விடுகிறீர்கள். இப்பொழுது நீங்கள் என்னையும் என்னுடைய அழைப்பையும் எவ்வாறு மதிப்பீர்கள். ஆதலின் உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நிலங்கள் வைத்துக்கொள்ள உரிமையுண்டென்று நான் நினைக்கிறேன். கொஞ்சம்பேர் பணக்காரர்களாகவும் கோடிக்கணக்காக ஏழைகளுமிருப்பது நமக்குப் பிடிக்கவில்லை ஆதலால் தான் நான் இதைச் சொல்லுகின்றேன்.

இல்லத்தில் தான் நற்குணங்கள் வளரும், அந்த இல்லங்களெல்லாம் இப்பொழுது நற்குணத்துக்கு விரோதியாயிருக்கின்றன. ஒவ்வொரு வீடும் கடனில்லாமலும் வரியில்லாமலும் இருக்க வேண்டும். அப்பொழுது எல்லாருக்கும் ஒவ்வொரு வீடு இருக்கும், அப்பேர்ப்பட்ட காலத்தை நான் எதிர்பார்க்கிறேன். அப்பொழுது தேசபக்தர்கள் நிறைந்திருப்பார்கள். உபயோகப்படாததை ஒருவன் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. பணக்காரர்களாகவிருப்பதற்காக நான் பணக்காரர்களை தூஷிக்கவில்லை; அவர்களில் சிலரைப்பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். அன்பில்லாமல் இந்த பூலோகத்தை ஆளுவதை விட அன்புடன் ஏழையாயிருப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன். கோடிக்கணக்கான பணங்களையுடைய தனவந்தர்கள் பட்டினி கிடக்கும் மனிதர்களைப் பார்த்துக்கொண்டு எவ்விதம் நாட்களைப் போக்குகிறார்களென்பது எனக்குத் தோன்றவில்லை. அதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. பணத்தில் அன்பைப் போக்கும்படியானதொரு வஸ்துவிருக்கிறது. ஒருவன் பணக்காரனானவுடன் அவனிடமிருக்கும் பணத்தைப் பறிப்பதற்காக அனேக மனிதர்கள் பிரயாசைப்படுகிறார்கள். ஆதலால் கொஞ்சகாலத்தில் அவன் ஜனசமூகத்தையே விரோதியாய்க் கருதுகின்றான். நன்றாய்க் கவனியுங்கள், நான் இவர்களை தூஷிக்கவில்லை. பணக்காரர்களெல்லாம் இயற்கையாகவே உண்டாக்கப்பட்டார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களைத் தூற்றாதேயுங்கள்; அந்த முறையைத் தூற்றுங்கள்.

அரசியல்

பொது ஜனங்களின் நன்மைக்கென்று அரசாங்கத்தில் சில உரிமைகள் சிலருக்குக் கொடுக்கப்படுகின்றன. அந்த உரிமைகள்

பொதுமக்களுக்கு நன்மை பயக்கவில்லை யென்றால் அவைகள் அவர்களிடமிருந்து கண்யத்துடன் பிடுங்கப்படவேண்டும், ஏனெனில் ஒவ்வொன்றும் நீதிக்கு உட்பட்டிருக்கவேண்டும். பிறகு பரிகாரம் என்ன இருக்கிறது. முதலில் இந்த தேசத்தில் (அமெரிக்காவில்) பெரிய ஆயுதம் என்னவென்றால், பேலட் பேப்பர். அரசர்களும் ஆயிரம் பேர்களை அடக்கியாளும் கைகளும் எவ்விதம் மதிக்கப்படுகிறதோ அவ்விதமே ஓட்டுப்போடும் கையும் மதிக்கப்படும். இந்த தேசத்தில் ஏழைகள் அதிகம். எந்த சட்டமாவது அவர்களை கொடுமைப்படுத்தினால் அது அவர்களுடைய குற்றம். அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு ஒரு கட்சியை பின்பற்றினார்கள். அவர்கள் பிறரால் ஏமாற்றப்பட்டார்கள். ஒரு மனிதன் ஒரு கட்சியின் பின்னால் ஒரு அங்குலங்கூட செல்லக்கூடாது. உலகத்திலுள்ளவர்களில் பாதிப்பேர் அந்தக்கட்சியை தழுவியிருக்கலாம். உலகத்திலுள்ள சிறந்த அறிவாளிகளெல்லாம் அந்தக் கட்சியில் இருக்கலாம்; உன் வழிக்கு கட்சி வராவிட்டால் அதன் வழி நீ செல்லாதே. யோக்கியமான மனிதன் மற்றொன்றை பின்பற்றமாட்டான். தன் வழியே செல்லுவான். சுயேச்சைக் கட்சியாயிருக்கலாம்; குடி அரசு கட்சியாயிருக்கலாம்; அது உன் வழிவராவிட்டால் நீ அதைப் பின்பற்றாதே. பேலட் கடுதாசியே அதிக அதிகாரமுள்ளது. சட்டம் தொழிலுக்கும் முதலுக்கும் உள்ள சச்சரவை தீர்க்கவேண்டும். ஆனால் நாகரிகத்திலிருந்தே நன்மை வரவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். நாகரிகமுள்ளவன் ஒரு பொருளை அதன் மதிப்புக்குக் குறைந்த பணத்தைக்கொடுத்து வாங்கமாட்டான். நாகரிகமுள்ளவன் ஒரு பொருளை அதன் மதிப்புக்கு உயர்ந்த பணத்துக்கு விற்கமாட்டான். நாகரிகமுடையவன் தான் ஏமாந்தாலும் பிறரை ஏமாற்றமாட்டான். இருந்தாலும் இந்த ஐக்கிய மாகாணத்தில் ஒவ்வொருவரும் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்க விரும்புகிறார்கள். இதுவே பாதகத்தை வளர்க்கிறது. இம்முறை முற்றிலும் தகர்க்கப்படவேண்டும்.

உலகத்தில் பெரிய பணக்காரர்கள் வசிக்கும் லண்டன் மாநகருக்குச் செல்லுங்கள். அங்கே ஆஸ்பத்திரிகளிலும், சிறைச்சாலைகளிலும் எவ்வளவு பேர் இறந்துபோகிறார்கள். இதுதான் சிறந்த நகரமா? நாகரிகம் சொல்லக்கூடிய செய்தி இதுதானா? அரண்மனைகளுக்கு மத்தியில் கோடிக்கணக்கான எளியவர்களைப் பாருங்கள். நாகரிகம் செய்யக்கூடியது இதுதானா? எளிய தாயானவள் கஷ்டப்பட்டும் தனது குழந்தைகளைக் காப்பாற்ற முடியாத நிலைமையிலிருக்கும் பொழுது நாம் நம்மை நாகரிகர்களென்று சொல்லிக்கொள்ள முடியுமா?

நான் இதை நாகரிகமென்று சொல்லமாட்டேன்.

பணக்காரர்கள் பொதுஜன விரோதிகள்.

அடிமை வழக்கத்தைக் கைவிடுமுன் நாம் அநாகரிகர்களாகவும் ஞானமில்லாதவர்களாகவுமிருந்தோம். இப்பொழுது பழக்கத்தைத்தவிர மக்களை அடிமைப்படுத்தக்கூடியது ஒன்றுமில்லையென்றும், இதுவே உலகத்தில் உள்ள ஆசாரங்களைக் காட்டிலும் சிறந்தது என்றும் சொல்லுகின்றோம். பணக்காரர்களுடைய குழந்தைகளைப்பாருங்கள்! அந்தோ! பணக்காரர்களாயிருப்பதற்காக என்ன தண்டனை! ஆதலால் என்ன நிகழ்ந்தாலும் இந்த ஆசாரங்களும் இந்த முறையும் என்றும் இருக்கவேண்டுமென்று சொல்லுங்கள். சிலர் 'தொழிலாளர்களெல்லாம் நமக்கு ஆபத்தை விளைவிப்பவர்கள்' என்று சொல்லுகிறார்கள், நான் அதை மறுக்கிறேன். நாமெல்லாம் அவர்களுடைய அதிகாரத்தில் இருக்கிறோம். நம்முடைய மோட்டார் ஓடுவது அவர்களாலேயே. நம்முடைய உயிரே அவர்கள் கையில் இருக்கிறது. நமது வீடுகளில் அவர்களே வேலை செய்கிறார்கள். நாம் அவர்கள் தயவில் இருக்கிறோம். இருந்தாலும் பணக்காரர்களைப்போல் அவர்கள் அவ்வளவு குற்றம் செய்வதில்லை. அவர்களுக்குப் பயந்து இதைச் சொல்லவில்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அரசாங்கம் அவர்கள் கையில் இருக்கிறதென்று நான் பணக்காரர்களுக்குப் பயப்படவில்லை. அவர்கள் பொதுநன்மைக்கு விரோதிகளாகும். பொதுஜனங்களெல்லாமொன்று சேர்ந்து அவர்களைத் தகர்ப்பார்கள். கோபத்தாலல்ல, வெறுத்தல்ல. நியாயத்தாலும் சமேச்சையாலும் அவர்கள் பணக்காரர்களை வெல்லுவார்கள். நமது தேசத்தில் குற்றவாளிகள் எனப்பட்ட ஒரு வகுப்பார் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் இருக்கவேண்டிய நிலையில் இருக்கவேண்டும் என்று நான் சொல்லியதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு குற்றமும் அவசியத்தால் ஏற்பட்டது; ஒவ்வொரு கொடூரங்களும அவசியமான சந்தர்ப்பங்களில்தான் நடக்கின்றன; குற்றம் குறைய வேண்டுமானால் நிலைமை மாறவேண்டும். வறுமையே குற்றத்தை உண்டு பண்ணுகிறது. வறுமையும் கந்தையும், தவறுதலும், குறைபாடும் மனிதனுள் இருக்கும் மிருக புத்தியை தூண்டிவிடுகிறது. அவன் படிப்படியாக சட்டத்துக்கு விரோதமாக நடந்து முடிவில் குற்றவாளியாகின்றான். நீ அந்தகுற்றவாளியைஎன்ன செய்வாய், நீ தண்டிப்பாய். அப்படியானால் க்ஷயரோகமுள்ள ஒருவனை ஏன் தண்டிக்கக்கூடாது? இது நியாயமென்று தோன்றுகிறதொருகாலம் வரும். ! நீங்கள் குற்றவாளியை சிறைக்கூடத்துக்கு அனுப்புவித்தீர்கள்; அவன் சீர்திருத்தப்பட்டானா? இல்லை. முன்னிலும் அவன் சீர்கெட்டுவிட்டான். நீங்கள் அவனுடைய ஆண்மையை

ஆகாரத்திலும், உடையிலுங்கூட மதமா?

(கைவல்ய சாமியார்)

—:(உ):—

உலகில் வெவ்வேறு பாகங்களிலுள்ள ஆடம்பரங்களையும், சுகங்களையும் பெறுவதற்காக மேல்நாட்டினர் புதிய உபாயங்களையும் வழிகளையும் கண்டுபிடித்துக் கொண்டே வருகிறார்கள். நாமோ ஒரே பாதையில் நடந்து கொண்டிருக்கிறோம். நூதனமாகவும் புதியதாகவும் எதையேனும் கண்டுபிடிப்பதற்கு நாம் முயற்சி செய்வதேயில்லை. நூதன சக்தியென்பது எவ்விதமாகவோ நம்மிடத்தினின்றும் போய்விட்டது. நமது ஜன சமூகத்தில் பெரும் பகுதி

அடைக்கப் பார்க்கிறீர்கள். நீங்கள் அவனுக்கு பச்சை குத்தி அடையாளமிடுகின்றீர்கள்; அவனுக்கு விலங்கிடுகின்றீர்கள்; இரவில் அவனை இருட்டில் இருக்கச் செய்கின்றீர்கள். அவனுக்கு வஞ்சம் அதிகமாகிறது. அவன் தன்னை சீர்திருத்திக் கொள்ளக்கூட நீங்கள் அநுமதிக்கமாட்டீர்கள். சிறையிலிருந்து வெளியே வரும்போது அவன் மிருகம் போலிருக்கிறான். நீங்கள் அவனை குற்றவாளியென்று வெறுக்கிறீர்கள். என்னைப்போல நீங்கள் அவ்வளவு கெட்டவர்களாக இல்லாவிட்டாலும் ஒன்று செய்யுங்கள். நீங்கள் செய்ய விரும்பிய குற்றங்களையெல்லாம் எண்ணிப் பாருங்கள். சந்தர்ப்பம் நேர்ந்திருந்தால் நீங்கள் எவ்வளவு குற்றம் செய்திருப்பீர்கள், ஒருவரும் பார்த்திரா விட்டால் நீங்கள் எவ்வளவு தீங்குகள் செய்திருப்பீர்கள். பிறகு மார்பில் கையை வைத்து குற்றவாளியை வெறுக்கலாமா என்று சொல்லுங்கள். குணசீலர்கள் தாழ்வானவர்களைக் கூட தண்டிக்கமாட்டார்கள்.

ஜன சமூகத்துக்கு ஒரு மனிதனை தண்டிக்க எவ்வித உரிமையுமில்லை. குற்றங்களைத் தடுப்பதற்காக ஒருவனை தண்டிக்கலாம். குற்றங்களை சீர்திருத்த ஒருவனைத் தண்டிக்கலாம. நீங்கள் அவனை எவ்வாறு சீர்திருத்துவீர்கள். அன்பிலிருந்து தான் நல்ல குணங்களெல்லாம் தோன்றுகின்றன.

ஆகாரத்திற்காக அழுதுகொண்டும் பட்டினியால் மரித்துக் கொண்டும் இருக்கிறது. மற்ற பகுதி இன்ன ஆகாரத்தைத் தொடலாம், இன்னவை தீட்டு, இவர்களிடம்தான் உண்ணலாம், என்பதில் அந்தஸ்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது, இவையனைத்தும் நம்முடைய குற்றமே. இந்த கஷ்டத்தினின்றும் நிவர்த்தியடைவதற்குள்ள மார்க்கம் எதையேனும் கண்டுபிடிப்பதற்கு நாம் யோசிப்பதேயில்லை. ஆனால் நமது உரத்த பெரும் பேச்சினாலே சத்தத்தை மாத்திரம் இப்பொழுது உண்டாக்கியிருக்கிறோம். நாம் மூலையிலிருந்து வெளியே வந்து வெளியே உலகமானது எப்படிச் சலிக்கின்றது என்பதைப் பார்க்க பயப்படுகிறோம். வெளியே வந்து உலகத்தைப்பார்த்தால் அப்பொழுது மனமானது திறந்து கொடுக்கும். ஆலோசனா சக்திதானே உண்டாகும். அப்படியானால் நமக்கெல்லாம் ஒன்றுபடும் தன்மையுண்டாகி நம்மிலிருக்கும் அருமைக் குணம் தானே விலகிவிடும்.

எல்லா நாட்டிலும் அந்தஸ்து என்று ஒன்று உண்டு. அது உடையிலும் ஆகாரத்திலும் எந்நாட்டிலும் மலிந்து கிடப்பது போலவே நமது நாட்டில் முன்னிருந்த மாதிரியல்லாமல் இப்பொழுது வேறுமாதிரியாகப் பாவித்துக்கொண்டு வருகின்றன. மேனாட்டில் உடை தயார் செய்யும் தொழிலானது ஒழுங்காயமைக்கப்பட்ட ஒரு சாஸ்திரமாய் விட்டது போலவே ஆகாரமும் ஒரு சாஸ்திர ரீதியின் ஏற்பாட்டை ஒட்டியே தயாரிக்கப்படுகிறது. உடையும், ஆகாரமும் அந்தஸ்திற்கு ஏற்றபடி இருந்தாலொழிய ஆண் பெண்கள் மதிக்கப்படுவதில்லை என்கிற எண்ணம் மனிதக் கூட்டத்தில் நிலைபெற்றிருக்கும் முக்கிய விஷயமாக விருக்கிறது. உயர்ந்த நிலையிலுள்ள ஸ்திரீ புருடர்கள் என்ன ஆகாரம் அருந்துகிறார்களோ, என்ன உடைதரிக்கிறார்களோ அதையேதான் மற்றவர்களும் உபயோகிக்க வேண்டிய ஆசையால் அது அவசியமென கற்பித்துக் கொள்ளுகிறார்கள். இல்லையேல் அவர்கள் தங்கள் அழகையும் மரியாதையையும் இழந்து மற்றவர்களால் மதிக்கப்படுவதில்லை என்று நினைக்கிறார்கள். இதற்குத்தான் அந்தஸ்து என்று பெயர். இந்த அந்தஸ்து மேனாட்டில் ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு வருஷத்திலும் நான்கு பருவ காலங்களுடன் கூட அதுவும் நான்கு தடவை மாறுகிறது. இதற்கு மத்தியில் இன்னும் எத்தனையோ தடவைகளும் மாறுகிறது. மேனாட்டிலுள்ள உடை, ஆகாரம் சம்பந்தமான வியாபாரிகள் அந்தஸ்து எந்த மார்க்கத்தில் மாறுதலடைகிற தென்பதையும்

எம்மாதிரி அந்தஸ்தை ஜனங்கள் விரும்பி ஆதரிக்கிறார்கள் என்பதையும் ஜாக்கிரதையாக கவனித்து வருவதோடு தாங்களாகவே ஒரு புதிய அந்தஸ்தை உண்டுபண்ணி அதனிடத்து ஜனங்களுடைய கவனத்தை அதிகரிக்கச் செய்கிறார்கள். அப்படி ஒரு வியாபாரி தான் உண்டுபண்ணும் அந்தஸ்தினிடத்திலே ஜனங்கள் ஆவல் கொள்ளும்படி செய்துவிட்டானானால் அவன் ஜீவித காலம் முழுதும் சம்பத்தில் பாக்கியவானாகிறான். அதுபோலவே பண்டிதனொருவன் ஜனங்களுடைய அவசியத்தின் ஆசைக்குத் தகுந்தவாறு மனதைச் செலுத்தும் மார்க்கம் தெளிவுபட வழிகண்டு அவ்வழி எல்லாரிடமும் போய்ச் சேர ஒரு புஸ்தகமும் எழுதுவானானால் அந்தப் பண்டிதனின் ஜீவித காலமும் அவன் இறந்த பின்னும் ஒரு பண்டித மனிதனாக்கப்பட்டு விடுகிறான். நமது தேசத்து வியாபாரிகளுக்கு சமயோஜிதம் போல் ஏதேனுமொரு புதிய மாதிரி அந்தஸ்தையுண்டாக்க முடிகிறதில்லை; நினைக்கவும் அவர்களால் ஆவதில்லை.

நமது வியாபாரிகளுக்குச் சிறிது பணம் வந்துவிட்டால் வீட்டில் பூசை, விரத அநுஷ்டானங்கள் வந்துபுகுந்துகொள்ளும். மேல்ஜாதி என்பதற்கு வேண்டிய நடிப்பைக் கற்றுக்கொடுக்க புரோகிதக் கூட்டம் நிறைந்துவிடும். கோவில் கட்டுவதும், கும்பாபிஷேகம் செய்வதும் தெய்வங்களுக்கு வாகனங்கள், ஆபரணங்கள் செய்து பிராமண சமாராதனைகள் பண்ணி புண்ணியத்தைத் தேடி மோக்ஷமடைவதற்கு யாத்திரை முடிப்பதில அவர்கள் பணமும், காலமும், புத்தியும் செல வழிக்கப்பட்டு வியாபாரத்தில் ஒருசிறுமாறுதல் வந்தால் நஷ்டமடைந்து அதற்குப் பின் காலக்ஷேபம் கேட்பதோடு திருப்தியடைந்து விடுவார்கள். இவ்வித முறையாலே நமது தேசத்து வியாபாரம் கெட்டு மேனாட்டு வியாபாரம் விருத்தியாய் விட்டது. அதுபோலவே நமது பண்டிதர்களும் உலகம் மாறும் அந்தஸ்துக்குத் தகுந்தபடி புஸ்தகங்களெழுதாமல் அர்த்தமாகாததும், பிரயோஜனத்திற்கு உபயோகப்படாததும், அநேக காலங்களுக்கு முன் அந்தஸ்திலிருந்ததும், எழுதின பண்டிதர்களுக்கே இன்னதென்று உணரப்படாததுமானதையே திருப்பித்திருப்பி எழுதிக்கொண்டே வந்ததினால் அதையே ஜனங்கள் கேட்டும் படித்தும், ஜனங்களுக்கு அர்த்தமாகாமலும், பிரயோஜனப்படாமலும், ஒரு உபயோகமும் அதிலில்லாமலும் போய்விட்டதினால் நமது ஜனங்களுக்கு அந்தஸ்தில் ஆசையுண்டானாலும் அதை அநுபோகப்

படுத்திக்கொள்ளச் சிந்தனா சக்தியை இழந்தவர்களாய் விட்டார்கள்.

மேனாட்டில் ஆகாரத்திலும் உடையிலும் அந்தஸ்து யாரிடமும் விளையாடும். அதற்குத் தடையில்லை; எங்கும் செல்லும். எல்லாரிடமும் அது சகஜமாகப் போகும். ராஜாவின் வீட்டிலுள்ள ஆகார உடையின் அந்தஸ்து பிரபுவின் வீட்டுக்குப் பயமில்லாமல் வரும். ஒரு நாவிதன் மயிர்வெட்டும் அழகால் அவன் வீட்டிற்கு அந்தஸ்து துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடும். ஒரு சக்கிலி தான் தைக்கும் செருப்பின் மேன்மை மிகுதியால் அவனை அந்தஸ்து அள்ளிவாரி எடுத்தணைத்து ஆனந்தப்படும். மேனாட்டில் அந்தஸ்தை அழுக்கிக்கொண்டிருக்கும் போர்டு துரையும் ஒரு கொல்லன்தான். மேனாட்டில் அந்தஸ்தை சட்டத்தாலோ, சாஸ்திரத்தாலோ, கடவுள் வாக்காலோ, தடைப்படுத்தவில்லை. நமது நாட்டில் ராஜாக்கள், பணக்காரர்கள், உயர்ந்த ஜாதியென்பவர்கள், சாஸ்திரம், தெய்வ கட்டளை, பாவபுண்ணியம் முதலியவைகளால் அந்தஸ்து எல்லாரிடமும் செல்லவொட்டாமல் தடைப்பட்டிருக்கின. மேனாட்டார்கள் நமது நாட்டில் வேர் ஊன்றின காலந்தொட்டு அந்தஸ்து எல்லா இடமும் தடையில்லாமல் போக இடமிருந்தாலும் இன்னும் பலஇடத்தில் பயத்துடனும் போய்க்கொண்டிருக்கின்றன.

இராஜ மாளிகைகளுக்கு சில சமூகம் வந்தால் அரசனை தீட்டுப்பட்டுப் போகுமென்பதும், தெய்வம், ராஜா, சாஸ்திரஞ்ஞான பண்டிதன் இவர்களுக்குத் தீட்டில்லை என்று சாஸ்திரத்திலிருந்தாலும் பல சமூகங்கள் இவர்களிடம் நெருங்கினால் தீட்டாய்விடுமென்பதும் நமது நாட்டிலுள்ள அனுபோகம்.

பணக்காரர்களிருக்கும் வீதிகளில் செருப்புபோட்டும் குடைபிடித்தும் நடக்கப்படாது. குதிரை ஏறியும் பல்லக்கேறியும் சில ஜாதியார்களின் ஊர்கோலம் தெருவீதி வழி போகப்படாது, முழங்காலுக்குமேல் வேஷ்டி கட்டவேண்டும், பெண்கள் இடுப்பிற்குமேல் ஆடையணியப்படாதென்றும்நமது நாட்டில அந்தஸ்து தடுக்கப்பட்டிருந்தது. மலையாளத்தில் பிரபுக்கள் உண்ணும் ஆகாரங்களில் பால் பாயாசமும், பெரிய அப்பமும் அந்தஸ்தான ஆகாரம். இதை தாழ்ந்த ஜாதியார் செய்து சாப்பிடப்படாதென்றும் தடுக்கப்பட்டிருந்தது. தாழ்ந்த ஜாதியாருக்கு பால், தயிர், மோர் கொடுத்தாலும் வீட்டு

விசேட சமயங்களில் விருந்து பதார்த்தங்களைக் கொடுத்தாலும் பாவமென்று இன்னும் கருதப்படுகிறது. சில அந்தஸ்தை அடைய தெய்வம் பணக்காரனிடம் வந்து சொல்லி அதற்குபின் அந்தஸ்தை சிலருக்கு வழங்கினதாக பல கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். நமது தெய்வ குமாரனான முருகன் பேரில் பாடப்பட்டிருந்த திருப்புகழைப் பழனியில் ஒரு தேவதாசி பாடிக்கொண்டு வந்தாள், அதற்கு முருகன் சந்தோஷப்பட்டு அவள் பேரில் கருணை வந்து தினமும் அப்படியே பாடுவதற்கு பழனியூர் பணக்காரன் கனவில் போய் ஓட்டுவில்லை வீடு கட்டும் அந்தஸ்தைத் தடைப்படுத்தியிருக்கும் சட்டத்தை அந்த தேவதாசிபேரிலிருந்து நீக்கி ஒரு ஓட்டுவில்லை வீடுகட்டிக்கொள்ள உத்தரவு கொடுக்கும்படியாகச் சொல்லிவந்ததாகவும், அவள் அதற்குப்பிறகு அந்த அதிகாரஸ்தனின் உத்தரவுப்படி ஓட்டுவில்லை வீடு கட்டிக்கொண்டதாகவும் சொல்லப்படும் இந்தக் கதையைப் பழனி தெய்வத்தின் பெருமைகளில் ஒன்றாகச் சொல்லப்படுகிறது. பழனி முருகன் அங்குள்ள பணக்கார குடும்பத்தில் சொன்னாரா? அல்லது பெரிய குருக்கள் கனவில் சரித்தாரா என்பதில் தர்க்கமும் சந்தேகமுமே ஒழிய திருப்புகழ் தேவதாசி பாடினதும், பழனி முருகன் கேட்டதும், கருணை பிறந்ததும் ஓட்டுவில்லை வீடுகட்டி வாழ உரிமை யில்லாததை தேவதாசிக்கு வாங்கிக்கொடுத்ததும் அவள் கட்டிக்கொண்டதுமாகிய இவைகளில் அவ்விடமுள்ள முருகன் பக்தர்களுக்குச் சந்தேகமில்லை. இப்பொழுது அந்த வீட்டின் பெருமையையும் சொல்லுவார்கள்.

ஒரு ஓட்டுவில்லை வீடு கட்டிக்கொண்டு வாழும் உரிமைக்கும் முருகன் பேரில் பாடப்பட்ட திருப்புகழ் படிக்கவேண்டும், பாடவேண்டும், பண்வேண்டும், தொண்டைப்பதம்வேண்டும், அதை முருகன் கேட்டு சந்தோஷப்பட்டு கருணைவந்து சொர்ப்பனம் சாதித்து அந்த தடைச்சட்டத்தை ஒருவருக்கு மட்டும் நீக்குவதனால் நமது நாட்டில் அந்தஸ்து எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருந்ததென்பதையும், சாதாரணமான இந்த ஸ்திதியே இப்படியிருந்தால் மற்றதின் கதியெல்லாம் எப்படியிருக்கும் என்பதையும் கவனித்துப்பாருங்கள். நமது நாடு புண்ணிய பூமியாக இருந்தாலும் புத்தியும் எண்ணமுமில்லாவிட்டால் அடிமைத்தனத்தை யழைக்க வேண்டுமோ?

நான் இங்கு சொல்லப்பட்ட அந்தஸ்தைக் கட்டுப்படுத்தினால் ஆகாரம், ஆரோக்கியம், கல்வி, அறிவு, தேவை, உரி

ரோஜா முத்தையா

ரின்பம் யாவும் வற்றிப்போகுமே யல்லாமல் வளருமோ? இதன் சக்திகளை மேனாட்டார்கள் தெரிந்துகொண்டமையால் உயிரின்பங்களை அனுபவிக்கிறார்கள். நாமோ பக்திரசத்தில் அழுதுகொண்டு பல துன்பங்களை ஏற்படுத்தி எதையும் சாத்வீக அவஸ்தை யென்று நினைத்துக் கொண்டு உயிரற்று, சலனமற்று ஒடுங்கி எதையும் செய்வதற்கு சக்தியில்லாமல் ஒரு சிறிது ஆலோசனா சக்தியுடையவர்களையும் தூற்றி மிக மிகத்தாழ்ந்ததாமசீக அவஸ்தையில் இருந்துகொண்டு எவருக்கும் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே அழுகி நாற்றமெடுத்துக்கொண்டு மேனாட்டு பப்பர்மெண்டு அந்தஸ்தைக்கண்டு நமது குழந்தைகள் ஆசைப்பட அதற்கு சமய ஆசாரங்களைக் கற்பித்து தேவாரப் பண்ணைப்படித்து பல்லாண்டுபாடி ஆயிரம் திருநாமத்தினால் தென்னோணம் போட்டாலும் அவையனைத்தும் அந்தப்பருவத்திற்குப் பயன் படாமல் பருவத்தின் ஆசை அதற்கு மேல் தாவி குழந்தை அழுகிறது. அதைக்கண்டு கோபம் வந்து பெண்சாதியிடம் சண்டை போடுகிறோம்.

அவைகள் அப்படியிருந்தாலும் நமது தெய்வங்களுக்கோ உட்காருவதற்கு ஒரு முழத்திற்குக் கீழே ரத்தினங்கள்; தங்கம், வெள்ளி, தந்தம் முதலியவைகளால், வாகனங்கள், ரத்தினாபரணங்கள். பொழுது போக்கோ மாதர்கள் கையால் வாழைமட்டையடி, வசந்த ருதுவருகை, தெப்பம், நாட்டியம் முதலியகேளிக்கைகள். நெய்பொங்கலும்,பஞ்சாமிர்தமும் ஆகாரம் முதலிய மற்றும் பல வகையாலும் தெய்வத்தின அந்தஸ்தைக்காப்பாற்றி கொண்டு வருகிறோம். நமதுதெய்வங்களுக்குசமதர்மமோ ஜனநாயக தத்துவமோ தெரியுமா? தெரிந்திருந்தால் ஓட்டுவில்லை வீடுகட்டிக்கொள்ள உத்திரவு வாங்கிக்கொடுக்கத் திருப்புகழை எதிர்பார்க்குமா? எதிர்பார்த்தாலும் பிச்சைக்காரன் மகனுக்குப் பிச்சைப் புத்தி போகாதென்பது போலவே பிச்சை எடுக்கும் நமது சிவபெருமானின் மகனுக்கு ஒரு ஓட்டுவில்லை வீடுகட்டிக்கொள்ள ஒருவருக்குமட்டும் சொர்ப்பனத்தில் உத்தரவு வாங்கிக்கொடுத்தது தானே புத்தியல்லவே. கால சக்கிரமானது எவரை நசுக்குகிறது என்பதை ஒருபொழுதும் கவனியாமல் சுற்றிக்கொண்டேயிருக்கிறது. மிகமிகத் தகுந்தவர்களும் மிகமிகப்பலம் வாய்ந்தவர்களுமே உயிர் பிழைக்கின்றனர் என்பதுதானே பிரகிருதியின் அந்தஸ்தும் அதன் கர்த்தாவான கடவுளின் செயலுமாகவிருக்கிறது.

நாமெல்லாம் எப்பொழுதும் அந்தர் முகமாய்ப் பார்க்கிறவர்கள், மோக்ஷமடையவே வந்தவர்கள், கடவுள் கைங்கிரியமே செய்யவேண்டியவர்கள். நம்முடைய பாவனைகளிலும் பாரமார்த்திக ரகசியங்களே உள் நுழைந்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறவைகளெல்லாம் அந்தஸ்து என்பது மட்டுமல்ல; ஆத்ம மோக்ஷமடைவதற்காகவென்றே வைத்துக் கொள்வோம். ஆனால் ஆகாரத்திலும் உடையிலுமுள்ள அந்தஸ்து நம்மை விட்டுப்போகிறதா? அந்தஸ்தை அலட்சியம் செய்யவேண்டிய பாரமார்த்திகத் துறையைத் துப்புரவு செய்ய ஏற்பட்டவர்களையும் அந்தஸ்து பிடித்துக்கொண்டுதானே இருக்கிறது. ரத்தினங்களிழைத்த உருத்திராக்ஷக் கண்டிகைகளும், பட்டுப்பீதாம்பரங்களும் கிளாஸ்கோ காவிமல்லுகளும் உடைகளாகவும் அன்றி மன்னாத தலை வாழையிலையில் பலவிதமான நிறுசாயங்களையுடைய ஆகாரங்களுமல்லவா மடாதிபதிகளின் அந்தஸ்தாகவிருக்கிறது. நமது தெய்வங்களுக்குக்கூட ஆகாரத்திலும் உடையிலும் அந்தஸ்து வேண்டியிருக்கிறது. இல்லையேல் அங்கு பக்தர்கள் கூட கூடுவதில்லை. அந்த தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்யப்படுவதுமில்லை. அந்தஸ்து இல்லாத தெய்வத்தினிடம் அருளில்லை என்று நினைக்கப்படுகிறது. சீரங்கத்துத் தெய்வம் நெய்யிலும் பழனித்தெய்வம் சிறுமலைப்பழ பஞ்சாமிர்தத்திலும் தன் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்கிறது. ரத்தினங்கள், அங்கவஸ்திரங்கள், பழம், பால், தேன், புனுகு, ஜவ்வாது முதலியவைகளால் தெய்வத்தின் அந்தஸ்து காப்பாற்றப்படவேண்டியிருக்கையில் தேசத்தையும ஜனங்களையும் உய்விக்க உடையும், ஆகாரமும் அந்தஸ்தாயிருப்பதில் ஆச்சரியமில்லை.

பொதுவாக அந்தஸ்தை எந்த தேசத்திலும் தடுப்பதில்லை. நமது நாட்டில் சர்வ சாதாரணமானவைகளில் கூட அந்தஸ்தைத்தடுத்து அது தந்தமக்கே உரிமை என்று மானுஷீகத்தை அவமானப்படுத்தினோம். அதனால் நாமும் கீழானோம் நமது தெய்வங்களும் அடிபட்டு அவதிப்பட்டு வெட்கத்தால் அவமானப்பட்டு நம்முகத்தை ஏறெடுத்துப்பார்க்காமல், பஞ்சம், மடமை, பிளேக், கொள்ளை நோய்முதலியவைகளை உண்டு பண்ணும் காளி, மாரி, காட்டேரி முதலியவைகள் தவிர மற்றெல்லா தெய்வங்களும் நாம் கிழக்கு முகமாக வைத்து கும்பாபிஷேகம் செய்தாலும் அவைகள் மேற்கையே பார்த்துக்கொண்டிருக்கின்றன. தெய்வ சக்தி தீட்டுப்பட்டு விடுமென்னும் தேசத்தில் தெய்வம் எப்படி இருக்கும்!

உயிர் வாழ்விற்கு லக்ஷியமுண்டா?

(முன்னுரை.)

(இது அனாதிகாலமாகக் கேட்கப்பட்டு வரும் ஒரு கேள்வி. இதற்குப் பலர் பலவிதமாக விடையளித்திருக்கிறார்கள். சிலர் லக்ஷியம் உண்டு என ஸ்தாபித்திருக்கிறார்கள்; சிலர் அதை மறுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் பிறரும் விஞ்ஞான அறிவுடையவர்களல்ல. விஞ்ஞான சாஸ்திரங்கள் விருத்தியடைந்த பிறகு பல இயற்கை உண்மைகள்—மறுக்கமுடியாத உண்மைகள் வெளிவந்திருக்கின்றன. எனவே விஞ்ஞான சாஸ்திரிகளின் அபிப்பிராயங்களை நம்மவர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். இந்தப் பிரச்சினையைப்பற்றி அறிவியக்கத் தலைவரான தோழர் பெர்ஸி வார்டுக்கும் ஆத்மவாதியான பிராங்கு ஹாரிசுக்கும் சமீபத்தில் சிக்காகோ நகரத்தில் வாதப் பிரதிவாதம் நடந்தது. அந்த விவாத வரலாற்றை மொழிபெயர்த்துக் கீழே தருகின்றோம். விஷயம் சற்று நீளமாயிருப்பதினால் அது "பகுத்தறிவில்" ஒவ்வொரு பாகமாக வெளிவரும்.—ஆசிரியர்.)

விவாத ஆரம்பம்.

பெர்சி வார்டு பேச்சு.

உயிருக்கு ஏதாவது லக்ஷியமுண்டா? இல்லை என்பதே எனது கருத்து. மூன்று விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு நான் உயிருக்கு "லக்ஷியம்" இல்லையென்று கூறுகிறேன். முதலாவது:—எல்லா ஜீவராசிகளும் உலகமும் எக்காலவது ஒருநாள் அழியப்போவது நிச்சயமாயிருக்கையில் உயிருக்கு ஏதாவது லக்ஷியமிருக்க முடியுமா? இரண்டாவது:—ஜீவிதப் போராட்டமே இயற்கை விதியாயிருக்கையில் உயிருக்கு என்ன லக்ஷியந்தான் இருக்கமுடியும்?

மூன்றாவது:—கஷ்டமும் துன்பமுமே ஜீவராசிகளின் அநுபவமாயிருக்கையில் உயிருக்கு ஏதேனும் ஒரு லக்ஷியத்தைக் கற்பிக்கவாவது முடியுமா? என்னுடைய வாதம் முழுதும் இந்த மூன்று கேள்விகளையும் பொறுத்ததாகவே இருக்கிறது.

நமது பூமி அழிவது நிச்சயமென்று வானசாஸ்திரிகள் கண்டிப்பாகக் கூறுகிறார்கள். நமது பூமி எப்பொழுதும் இருந்ததில்லை; எப்பொழுதும் இருக்கவும் முடியாது. சூரியனாகிய விளக்கை நமது பூமியான விட்டில்பூச்சி சதா சுற்றிக்கொண்டு வருகிறதென்றும் எக்காளாவது ஒரு நாள் அந்த விட்டில் விளக்கில் விழுந்து மாய்வது நிச்சயமென்றும் வானசாஸ்திரம் கூறுகிறது.

வானமண்டலத்திலே மிதக்கும் எத்தனையோ செத்த உலகங்களில் சந்திரனும் ஒன்று. நமது பூமிக்கு ஏற்படப் போகும் கதியை அது சதா நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு இருக்கிறது. பூமி எந்தப் பொருளினால் ஆக்கப் படுகிறதோ அந்தப் பொருளாலேயே சந்திரனும் ஆக்கப் பட்டிருக்கிறது. ஆதியில் அது பூமியின் ஒரு பகுதியாக இருந்தது, சந்திரன் உருவில் சிறிதாயிருப்பதினால் பூமியை விட வெகு சீக்கிரம் அது குளிர்ச்சியடைந்து விட்டது. ஒரு காலத்திலே நமது பூமியும் சந்திரனைப்போல் பிணமாகப் போவது உறுதி.

சூரியன் அழியும்போது உலகத்திலுள்ள ஜீவராசிகள் எல்லாம் அழிந்துபோகுமென்றும் வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். சூரியன் ஏராளமான வெப்பத்தையும் ஒளியையும் சதா கக்கிக்கொண்டு இருக்கிறது. லக்ஷோபலக்ஷம் வருஷமாக அது அவ்வாறு கக்கிக்கொண்டே வந்திருக்கிறது. மேலும் பல லக்ஷோபலக்ஷம் காலம் அது கக்கிக்கொண்டும் இருக்கும். ஆனால் என்றைக்கும் அது அவ்வாறு கக்கிக்கொண்டு இருக்கவும் முடியாது. சூரிய வெப்பம் அளவிடற்கரியதாயிருந்தாலும் அது எல்லையற்றதன்று. அதற்கும் ஒரு முடிவுண்டாகும். வருஷந்தோறும் சூரியன் வடிவமும் குறுகிக்கொண்டு வருகிறதாம். சூரியனின் குறுக்களவு வருஷந்தோறும் 250 அடி சுருங்கி வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. காலக்கிரமத்தில் சூரியன் குளிர்ச்சியடைந்து விடுமென்பது நிச்சயம். நமக்குக் கிடைக்கும் சூரிய வெப்பமும் ஒரு நாள் நின்றுவிடும். சூரியன் ஓரளவு குளிர்ச்சி

யடைந்தவுடன் நமக்கு வெப்பமோ வெளிச்சமோ கிடையாம லாகிவிடும். எனவே ஒருகாலத்திலே பனிப்படலங்கள் பூமியை மூடப்போவது உறுதி. பூமியும் உறைந்து பனிமயமாகிவிடும், மக்கள் உட்பட சகல ஜீவராசிகளும் அழிந்து போகும். உல கத்துக்கும் மக்கள் சமூகத்துக்கும் மற்றும் ஜீவராசிகளுக் கும் நேரப்போகும் கதியைப்பற்றி இவ்வாறெல்லாம் வான சாஸ்திரம் தீர்க்க தரிசனம் கூறியிருக்கிறது.

இனி உண்டாகப்போகும் உலகப் பிரளயத்தை வர் ணிக்க எத்தனையோ பேர் முயன்றிருக்கிறார்கள். பிரபல பிரஞ்சு வானசாஸ்திரியான காமில்லி பிலாமாரியன் என்பவர் கூறுவதாவது:—

மலையுச்சிகளிலிருந்து பனிக்கட்டிகள் உருகியோடி உலகம் முழுதும் பரவும், ஜீவராசிகளும் நாகரிகமும் அழி யும். நியூயார்க்கு, லண்டன், பாரிஸ், பெர்லின், வீயன்னா கான்ஸ்டாண்டி நோபில், ரோம் முதலிய நகரங்கள் பனிப் பிரவாகத்தில் மூழ்கி அழியும். கடைசியாக மீதமாகும் மக்கள் எல்லாம் பூமத்தியப்பிரதேசங்களிலுள்ள கடற் கரையை நாடிச்சென்று மடிவார்கள், 10,000,000 வருஷங்க ளுக்குப்பிறகு களைத்து இளைத்து மலடாகி பூமி பாழ் வெளி யாகி விடும்.

ஷேக்ஸ்பியர் மகா கவியும் தமது நாடகம் ஒன்றில் இவ் வாறே வர்ணித்துக்கூறியிருக்கிறார். விஞ்ஞான சாஸ்திரம் எவ்வளவு தான் அபிவிர்த்தியடைந்தாலும் சரி—நாகரிகம் எவ்வளவுதான் முன்னேற்றமடைந்தாலும் சரி, உலகமும் மக் களும் ஜீவராசிகளும் ஒரு காலத்திலே அழியப்போவது திண்ணம். பிரபஞ்ச வாழ்வே ஒரு கனவாகப் போவதும் நிச்சயம்.

இந்த வாழ்வு பயனற்றதென்றும் இந்த வாழ்வுக்கு எத் தகைய லக்ஷ்யமும் இல்லையென்றும் மரணத்துக்குப் பின் ஒரு வாழ்வு இருக்கவும் உலகத்துன்பங்களுக்கு அங்கு பரி காரம் கிடைக்கவும் செய்தால் தான் வாழ்வு பயனுடையதாகு மென்றும் எல்லா மதஸ்தர்களும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கி றார்கள்.

எனவே வானசாஸ்திரிகளின் அபிப்பிராயங்களை அறிந்த பிறகும் ஆத்மா அழிவற்றதென்று எவ்னாவது நம்புவானா?

எனவே மனிதன் மட்டும் தான் அழிவற்றவன் என்றும் பிரபஞ்ச விதியை (மரணத்தை) மீற ஆற்றலுடையவன் என்றும் பெருமைபாராட்டிக்கொள்கிறான். எனது நண்பர் ஜான் எமர்சன் ராபர்ட்டு கூறுவதைப்பாருங்கள்:—

"ஆத்மா அழிவற்றது எனக் கூறுவது எவ்வளவு துணிகரமான அபிப்பிராயம்! தான் நித்தியனாக இருக்கப்போவதாய் மனிதன் கனவு காண்கிறான். நேற்று அவன் இருக்கவில்லை; எனினும் நாளை இருக்கப்போவதாக நம்புகிறான். பூர்வ ஜென்மமில்லாத மனிதன் மரணத்துக்குப் பின் சுவர்க்கபோகம் அனுபவிக்கப்போவதாய் மனப்பால் குடிக்கிறான். இவ்வாறு மனப்பால் குடிப்பதும் கனவு காண்பதும் எவ்வளவு துணிகரமானது! கிரகங்கள் எல்லாம் முதிர்ச்சியடைந்து தேய்ந்து இளைத்து அழிந்துபோகின்றன; கண்டங்கள் சுயமாகவே நொறுங்கி மண்ணாகிப் போகின்றன. மலைகள் சிதைந்துபோகின்றன. மகா சமுத்திரங்களும் அலை ஓய்ந்து அடங்குகின்றன. உலகங்களும் கிழங்களாகின்றன. நட்சத்திரங்கள் ஒளி மழுங்கி அழிந்து போகின்றன. சூரியன்களும் எரிந்து எரிந்து சுயமாக அழிந்து போகின்றன. வானமண்டலத்திலே நட்சத்திரங்களைக்காண முடியவில்லை. எனினும் மனிதன்—மண்ணாலானவன்—ஒரு ஆவி—நீர்க்குமிழி—பிரபஞ்சத்திலே ஒரு புழு—மட்டும் தான் நித்தியன் என்று கூறிக்கொள்கிறான். மரணம் அவனை அண்டாதாம். உண்மையில் மரணம் என்பதே இல்லையாம். அவன் மீண்டும் உயிர்பெற்று மீண்டும் வாழ்ந்து மீண்டும் மீண்டும் உல்லாசமாய் வாழ்க்கை நடத்திக்கொண்டே இருப்பானாம். இது எவ்வளவு துணிகரமான கனவு! இதைவிட அகம்பாவமான துணிச்சலான மூடத்தனமான செயல் வேறுண்டா!"

ஆகவே எனது நண்பரான எதிரியை ஒரு கேள்வி கேட்கிறேன். உலகமும் ஜீவராசிகளும் அழிவது நிச்சயமாக இருக்கையில் உயிருக்குப்பொருள் இருக்கக்கூடுமா? ஒரு லக்ஷியம் இருக்கக்கூடுமா? "பொருளே இல்லை; லக்ஷியமே இலலை" என்பதுதான் எனது விடை.

இனி, எனது இரண்டாவது கேள்வியை எடுத்துக்கொள்ளுவோம். ஜீவிதப் போராட்டமே இயற்கை விதியாக இருக்கையில் உயிருக்கு ஏதாவது பொருளோ லக்ஷியமோ இருக்க முடியுமா?

உயிர்கள் சுயமாக மாறுகின்றன; விரும்பும் உருவெடுக்கின்றன; எனவே உயிருக்கு ஒரு லக்ஷயமிருக்க முடியுமா? இயற்கை விதியை அறிவும், கருணையுமுடைய ஒன்று வகுத்திருக்கக் கூடுமா? பலயுகங்களாய் நமது பூமி ஒரு போர்க்களமாகவே இருந்து வந்திருக்கிறது. எல்லையற்ற உயிர்களை இயற்கை தோற்றுவித்திருக்கிறது. அவைகளுக்குப் போதுமான உணவே இல்லை. வரையறையின்றி ஜீவராசிகள் பெருகுவது உலக வழக்காக இருந்து வருகிறது. ஜீவிதப் போராட்டத்துக்கும் அதுவே காரணம். வாழ்க்கையே போராட்டமாகவே இருந்து வந்திருக்கிறது; வருகிறது; மேலும் இருந்து வரும். வீழ்ச்சியடைந்தவர்களுக்கு இயற்கை கருணை காட்டுவதில்லை.

ஜீவிதப்போராட்டத்திலே இளைத்தவன் வீழ்ந்து விடுகிறான். பலசாலி உயிர் வாழ்கிறான்; சந்ததிகளை உற்பத்தி செய்கிறான்; அவன் வமிசம் பெருகுகிறது. ஓயாமல் போராடிக்கொலை செய்து கொண்டிருப்பதினாலேயே உயிர் பிழைக்கிறது; வளர்கிறது; உரம்பெறுகிறது. பல உயிர்கள் அழிந்தால் தான் ஒரு உயிர் வாழ முடிகிறது. ஜீவிதப்போராட்டத்திலே வெற்றிபெறும் பொருட்டு ஒருவன் மற்றவர்களுடன் சதா போராடிக்கொண்டே இருக்கிறான்.

இயற்கை விதியான இந்த ஜீவிதப்போராட்டத்திலே ஏதாவது ஒரு பொருளுண்டா? லக்ஷயமுண்டா? கருத்துண்டா? என மதிப்புக்குரிய என் எதிரியைக் கேட்கிறேன். பேய்ப்போராட்டத்தினாலும் கொடிய போட்டியினாலும் பரிணாமமடையும் உயிர்களின் வளர்ச்சியே உயிருக்கு லக்ஷயமில்லையென்பதை நன்கு விளக்கிக்காட்டுகிறது. கொடிய போராட்டம் நடத்தியே உயிர்கள் வாழ்ந்து பெருகவேண்டுமென்று ஒரு கடவுள் விதித்திருந்தால் அத்தகைய கடவுள் ஒரு பைத்தியகார, துஷ்டக்கடவுளேயாகும். அப்பேர்ப்பட்ட கடவுள் ஒன்றில் சர்வவல்லமையுள்ள ஒரு துஷ்டனாக இருக்கவேண்டும்; அல்லது சர்வ வல்லமையுள்ள ஒரு பைத்தியகாரனாக இருக்கவேண்டும்.

ஜார்ஜ் பெர்னாட்ஷா கூறியிருப்பதாவது:- "தற்காலலண்டனைப்போல் வேறேஒரு லண்டனையமைக்கக்கூடியஒரு துஷ்டனையும் தற்கால லண்டனை அழிக்கக்கூடிய பரோபகாரியையும் மனத்தினாலும் கற்பனை செய்ய முடியாது."

பெர்னாட்ஷா அபிப்பிராயத்தை வேறு மாதிரியாக நான் விளக்கி கூறுகிறேன்.

தற்கால உலகத்தைப்போல் வேறு ஒரு உலகம் அமைக்கும் ஆஷ்டனையும் தற்கால உலகத்தை அழிக்கும் ஒரு பரோபகாரியையும் மனத்தினாலும் கற்பனை செய்ய முடியாது.

கடைசியாக எனது மூன்றாவது கேள்வியை கவனிப்போம்.

கஷ்டமும் துன்பங்களுமே நமது வாழ்க்கையின் அநுபவங்களாயிருக்கையில் உயிருக்கு ஏதாவது லக்ஷயமிருக்க முடியுமா?

உலகத்தில் ஆபாசங்கள் நிரம்பி யிருப்பதையே நாம் அநுபவத்தில் காண்கிறோம். பொருள் காண முடியாத இந்த உலகம் துன்பக்கடலாகவே இருக்கிறது என ஷோபனஹோர் என்ற ஜெர்மன் ஞானி கூறியிருக்கிறார் "இந்த உலகத்தை ஒரு கடவுள் சிருஷ்டித்திருந்தால் அந்தக் கடவுளாயிருக்க நான் விரும்பமாட்டேன். உலகத் துன்பங்கள் என் நெஞ்சைப் பிளந்துவிடும்" என அவர் மேலும் கூறியிருக்கிறார்.

ஆண்களிலும் பெண்களிலும் பெரும்பாலாருக்கு வாழ்க்கை எப்படியிருந்திருக்கிறது? அவர்கள் எதற்காக உயிர் வாழ்கிறார்கள்? மனிதத்தன்மையை கொன்று மக்களை ஆளவுமுடையவராக்கும் நமது வாழ்க்கை முறையைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

தற்கால நாகரிகத்தைக் கண்டித்து இங்ஙனம் கூறியிருக்கும் கீழ்வரும் அபிப்பிராயங்களை பிராங்க் ஹாரிஸ் கவனிப்பாராக!

"மக்கள் காட்டாளராக இருந்த அநாகரிக காலத்திலே பலசாலி பலவீனனை விழுங்கி வந்தான், பலவீனனின் மாமிசத்தையே தின்று உயிர் வாழ்ந்தான். இப்பொழுது மக்கள் எவ்வளவோ சட்டங்களை உண்டுபண்ணியிருந்தும்—விஞ்ஞானம், இலக்கியம், கலைகள் முதலியன எவ்வளவோ விருத்தியடைந்திருந்தும்—தந்திரசாலிகளும் கருணையில்லாதவர்களும் எளியாரையும் மூடர்களையும் அதிர்ஷ்டமில்லாதவர்களையும் ஹிம்சித்தே வாழ்ந்து வருகிறார்கள். தமது அய

ருஷ்யா எப்படி விடுதலை அடைந்தது?

(சுதீந்திர யோஸ்)

ருஷ்ய மத ஆச்சாரிகள் மிகப் பழையகால கொள்கைக் காரர்கள்.

ருஷ்ய அரசன் கொடுங்கோன்மையில் கொள்ளை அடித்தது போலவே மத ஆச்சாரிகளும் மக்களிடம் கொள்ளை அடித்தார்கள்.

பொது உடமை உணர்ச்சி கிளம்பிய பிறகுதான் மதக் குருக்களுக்கு சாவுமணி அடிக்கத் துவங்கிற்று. ஆனாலும்

லாரை அவர்கள் விழுங்கவில்லையென்பது மெய்யே; அவர்களது இரத்தத்தைக் குடிக்கவில்லையென்பதும் மெய்யே. ஆனால் அயலார் தொழிலின் பயனாய்—அயலார் தியாகத்தின் பயனாய்—அயலார் வறுமையினால்—வாழ்ந்து வருகிறார்கள். உழைத்து உழைத்து உருவழிந்துபோகும் ஏழை—மனைவி மக்களுக்காக வாழ்நாள் முழுதும் பாடுபட்ட ஏழை—வாழ்நாள் முழுதும் ஒரு சுகமாவது அறியாமல் கல்லறைக்குச் செல்லும் ஏழை—அந்த ஏழையே மற்றவர்களின் இரையாக இருந்து வந்திருக்கிறான். அவனுடைய சகோதர மக்களே அவனை விழுங்கி வந்திருக்கிறார்கள். இருட்டறையில் உட்கார்ந்து, தன் குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற இரவும் பகலும் தையல் வேலை செய்யும் ஏழைப் பெண்ணை அவளுடைய அயலார் விழுங்கி வருகிறார்கள்;

நாகரிக வாழ்வின் கொடுமைகளை நினைத்துப் பார்க்கும்போது—அநேகர் வாழ்க்கையில் தோல்வியடைந்து வறுமைப்பட்டு கண்ணீர் வடித்துக் கஷ்டப்படுவதை நோக்கும்போது—ஒருவனையொருவன் பிடித்துத் தின்று வாழ்ந்த அந்த அநாகரிக காலமே—நரமாமிச பட்சணிகள் வாழ்ந்த காலமே—தற்காலத்தை விட மேலானது எனத் தோன்றுகிறது.

(இதை மறுத்துப் பேசியவரின் பேச்சு அடுத்த மாதம் வரும்)

அவர்கள் பொது உடமை மதம் வெகு காலைக்கு நிலைக்காது என்று கருதி இருந்தார்கள்.

மதக் குருக்களுக்கு பாமர மக்களிடம்தான் அதிக செல்வாக்கு இருந்தது. அதை நிலைநிறுத்த பாமர மக்களை படிக்க விடாமலும் ஆராய்ச்சியில் அறிவைச் செலுத்தவிடாமலும் மதக் குருக்கள் தடுத்துக்கொண்டே வந்தார்கள்

இதன் பயனாய் ருஷ்ய பாமர மக்கள் மிக்க மூடநம்பிக்கைக்காரர்களாய் இருந்தார்கள். சன்னியாசிகளிடமும் எலும்புகளிடமும் மந்திரங்கள், மாயங்கள், இயற்கைக்கு மீறின அதிசயங்கள் ஆகியவைகளிடத்திலும் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கையும் பக்தி விசுவாசமும் உண்டு. இதை இந்தப்படி நம்பும்படி செய்வதே மத ஆச்சாரிகளின் வேலையாய் இருந்தது.

வயல்களில் புண்ணிய தீர்த்தத்தை தெளித்தால் பயிர்கள் செழித்து விளைந்துவிடும் என்று கருதி இருந்தார்கள்.

நோயாளி தலையில் புண்ணிய தீர்த்தம் தெளித்தால் காயலா சௌகரியமாகிவிடும் என்று நம்பி இருந்தார்கள்.

கடவுள் பக்தி இல்லாதவர்களுக்கும் மத சாஸ்திரங்களை எதிர்ப்பவர்களுக்கும் மோட்சம் கிடைக்காதபடி செய்துவிடுவதாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

பொதுவுடமைக்காரர்கள் கோவில் சொத்துக்களை கைப்பற்றி மக்களுக்கு தாராளமாய் அறிவு பெருகும் விஷயங்களைப் போதித்து கல்வி கொடுக்க முயற்சித்த உடன் அவர்களை நாஸ்திகர்கள் என்று தூற்றினார்கள்; ஜாதியை விட்டு விலக்கினார்கள்; கடுஞ் சாபமிட்டார்கள்

இவை ஒன்றுக்கும் பயப்படாமல் போல்ஷ்விக்கர்கள் மதத்தின் பெயரைச்சொல்லி வயிறு வளர்க்கும் வைதீக பண்டிதர்கள் மோசடிகளையெல்லாம் பகிரங்கப்படுத்தி விட்டார்கள்.

அதிர்ஷ்டமென்பதையும், மற்றும் தெய்வீகம் என்பதையும் எல்லாம் பொய்யாக்கினார்கள்.

சைன்சு, பூத பௌதிக முறைப்படி ஒவ்வொரு காரியத்தையும் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

மதத்திற்கும் அரசாங்கத்துக்கும் சம்பந்தமில்லாதாக்கினார்கள்.

மதப்படி செய்யும் கலியாணங்கள் முதலிய சட்டங்கள் சட்டப்படி நிராகரிக்கப்பட்டன.

18 வயதுக்குக்கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கு மதபோதனை செய்யக்கூடாதென்று சட்டம் செய்தார்கள்.

பள்ளிக்கூடம் முழுவதும் சர்க்கார் பள்ளிக்கூடங்களாயின. அப்பள்ளிக்கூடங்களில் மதப்படிப்புகள் கூடாதென்று திட்டம் செய்தார்கள்.

மத விஷயங்களில் அவரவர்கள் மனச்சாட்சிப்படி நடக்க சுதந்தரம் கொடுக்கப்பட்டது.

வைதீக மதத்தால் நசுக்கப்பட்டவர்கள் எல்லாம் தலைதூக்கி நடக்க வசதி ஏற்பட்டது.

ஆலய சொத்துக்கள் பற்றியும் மடசொத்துக்கள் பற்றியும் சட்டமேற்படுத்தி அவைகளை கைப்பற்றியும், தனிப்பட்டவர்கள் சொத்துக்கள் பற்றியும் சட்டமேற்படுத்தி தேவைக்கு மிஞ்சிய சொத்துக்களைக் கைப்பற்றியும் அவைகளை நாட்டின் நன்மைக் கவசியமான காரியத்திற்குச் செலவு செய்து வருகிறார்கள்.

கோவில் கட்டிடங்கள் முழுவதும் முனிசிபாலிட்டிக்குச் சொந்தமாக்கி விட்டார்கள்.

பிரார்த்தனை செய்ய விரும்புவோர்கள் முனிசிபாலிட்டியாரது அனுமதி பெற்றால் தான் கோவிலுக்குள் விடப்படுவார்கள்.

பரம்பரையாக கோவில் சொத்தை அனுபவித்துக்கொண்டு கோவிலின் பேரால் ஆதிக்கம் செலுத்தி வந்தவர்களுக்குப் பொது உடமை மதக்காரர்களின் செய்கை பொறுக்க முடியவில்லை.

இந்தக்கூட்டத்தார் பாமரமக்களை பொது உடமைக்காரர்கள் மீது ஏவிவிட பல்வேறு வகையாலும் முயற்சி செய்தார்கள். கெட்ட எண்ணம் கற்பித்தார்கள். அவர்களை அரக்கர்கள் என்றார்கள். பொது உடமை அரக்கர்களால் உலகம் நாசமாய் விடும் என்றார்கள்.

பணக்காரர்கள் எல்லாம் வைதீகர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். இருவர்களும் சேர்ந்தும் எதிர்த்துப்பார்த்தார்கள். முடிவில் பொது உடமையும் சமதர்மமுமே வெற்றி பெற்றது. பொது உடமை சர்க்கார் கடைசியாக சில மடாதிபதிகளையும் மதக்குருக்கள் களையும் தேசப்பிரஷ்டம் செய்தார்கள். பல குருக்கள்மார்களின் தலையை வெட்டினார்கள். பொது ஜனங்கள் நன்மைக்கு விரோதமில்லாததும், சமாதானத்திற்கு பங்கமில்லாததும், பொதுஉடமை சர்க்கார் கொள்கைக்கு விரோதமில்லாததுமான மத அனுஷ்டானத்தை யார் அனுசரிப்பதைப் பற்றியும் சர்க்காருக்கு கவலை இல்லையென்று விளம்பரம் செய்து விட்டார்கள். இதுசமயம் ருஷ்யாவில் கோவில்களுக்கு பணம் இல்லாததாலும் மத குருக்களுக்கு வரும்

படிக்கு மார்க்கமில்லாததாலும் இப்போது அங்கு கோவில் மதம் என்பனபோன்ற பேச்சுக்கள் மிகவும் அடங்கி விட்டன.

1921வருஷத்தில் ருஷ்யாவில் பஞ்சம் வந்த காலத்தில் ஜனங்கள் பட்டினியால் மடிவதைப் பார்த்த பொழுது உடமைக்காரர்கள் கோவில்களில் தூசி படர்ந்து துருப் பிடித்துக் கிடந்த வைரம், கெம்பு, வைடூரியம் முதலிய இரத்தினக் குவியல்களையும் தங்கம் வெள்ளி உலோகங்களையும் கொடுக்கும்படி கோவில் நிர்வாகிகளைக் கேட்டார்கள். அவர்கள் கொடுக்க மாட்டேன் என்று மறுத்ததுடன் "ஓ பக்தர்களே கோவில் சொத்து பறிபோகிறது, காப்பாற்றுங்கள்" என்று ஓலமிட்டார்கள். இதற்குள் சர்க்கார் படை வந்தது. படைக்கும் பக்தர்களுக்கும் போர் நடந்தது. இந்த சந்தர்ப்பத்தில் சில பாதிரிகள் நகைகளைத் திருடிக்கொண்டு போனார்கள்.

பிறகு சர்க்கார் அவர்களை ஜெயித்து வழிமறித்து நகைகளை கைப்பற்றி அவைகளுக்கு தானியங்கள் வாங்கி ஏழைகளுக்கு உதவி பஞ்சத்தை தணித்தார்கள்.

இப்பொழுது அங்குள்ள இளைஞர்கள் எல்லாம் ஒன்றுகூடி தினம் மதமெதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்துகிறார்கள். இயற்கை விரோதம் பூத பௌதிக சாஸ்திரம் ஆகியவைகளைப்பற்றி பிரசாரம் செய்து மக்களின் இருளையும் மூடநம்பிக்கையையும் போக்கி அறிவு வளர்ச்சி செய்கிறார்கள். இதனால் ருஷ்ய மக்கள் எங்கள் அறிவு விசாலமுற்றது என்று கூவி மனமகிழ்ச்சி அடைகிறார்கள்.

காற்று, கடல், மின்சாரசக்தி, ரேடியத்தின் அதிசயம் ஆகிய ஆராய்ச்சியிலே மக்கள் மனம் பதியும்படி போதிக்கப்படுகிறது. பழைய புராணம், தேவதை, மந்திரம், பிரார்த்தனை, உபாசனை, விரதம், விதி முதலாகிய இவைகள் எல்லாம் அங்கு மறக்கடிக்கப் படுகின்றன.

மனிதன் முயற்சிக்கும் செய்கைக்கும் மனிதனே கர்த்தாவே ஒழிய வேறொருவர் இல்லையென்பதை நன்றாகக் கற்பிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையையும் தன்முயற்சியையும் உண்டாக்கப்பட்டு வருகின்றது. இளைஞர்கள் இதே வேலையில் கிராமங்கள்தோறும் ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் சம்மந்தமில்லையென்றும், கடவுள் செயல் என்றும் கடவுள் விமோசனமளிக்கும் என்றும்

ஜந்துக்களின் வேகம்.

மனிதன்.

மனிதனுக்கு நீண்ட தேகமும், நீண்ட கால்களும் இருந்த போதிலும் அவன் மணிக்கு 25 மைலுக்கு அதிகம் செல்ல முடியாது. வில்லிரிடோலா என்ற உலகப்பிரசித்தி பெற்ற ஓட்டக்காரரால் மணிக்கு 25 மைல்தான் ஓட முடிகின்றது. மனிதன் வேகத்திற்கு அதிகமாக ஒரு யானை கூடச் செல்கின்றது. ஒரு யானை ஓட ஆரம்பித்தால் மணிக்கு 30 மைல் வரையில் ஓடும்.

பறவைகள்.

வேகத்தில் பறவைகளுக்கு ஈடாக வேறெதையும் கூற முடியாது. ஆனால் மனிதன் உண்டாக்கிய ஆகாய விமானங்கள் மாத்திரம் சர்வசாதாரணமாக மணிக்கு 100 மைல் செல்கின்றன. இன்னும் சில விமானங்கள் 150லிருந்து 200 மைல் வரையிலும் செல்கின்றன.

இருப்பினும் பறவைகள் பிரமிக்கும்படியான வகையில் ஆகாயத்தில் பறந்து செல்கின்றன. ஒரு கழுகு சாதாரணமாக மணிக்கு 150 மைல் பறந்து போகிறது. ஸ்வாலோ என்ற பறவைகள் 100 மைல் செல்கின்றன. லாப்விங் என்ற அமெ

நம்புவதாலேயே மனிதர் மனிதத் தன்மையை இழக்கிறான் என்றும், முன்னேற்றம் நாசமடைகிறதென்றும், காண முடியாத ஒன்றை ஒரு வஸ்துவென்று கருதி அதனால் பொழுதையும் அறிவையும் போக்கி வருவதாலேயே மனித சமூகம் மறுபடியும் மிருகப் பிராயத்திற்கு போக நேரிடுகின்றது.

மனித சக்தியும் நீதியும் ஒழுக்கமும் கெடுகின்றது என்பதையும் இப்போது நன்றாய் உணர்ந்துகொண்டார்கள்.

ரிக்கப்பறவை மணிக்கு 100 மைல் விதம் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து செல்லுகிறது.

கும்பல் கும்பலாய் சில பறவைகள் காஷ்மீரத்திலிருந்து சிலோன் வரையிலும் பறந்து செல்கின்றன. இந்த பிரயாணத்தை சாதாரணமாக மழை கால ஆரம்பத்தில் துவக்குகின்றன. இளவேனிற்கால ஆரம்பத்தில் ஹிமயகிரிக்குத் திரும்பிச்செல்கின்றன. சில சமயத்தில் ஆகாயத்தில் பறவைகள் கும்பல் கும்பலாகப்போவதை காம் பார்க்கின்றோமாதலால் இதில் சந்தேகப்படுவதற்கு ஒன்றுமில்லை.

மிருகங்கள்.

சிங்கம், புலி, சிறுத்தைப்புலி, முதலியவைகள் மணிக்கு 40 மைல் விதம் ஓடுகின்றன. முயலும், வேட்டை நாயும், 45 மைல் விதம் ஓடுகின்றன. கங்காரு, ஜேர்பா என்ற பிராணிகள் நான் மிருகங்களிலே அதிக வேகமாய் ஓடக்கூடியன. ஆனால் இவைகள் வெகுதூரம் ஓட முடியாது. கெஜல் என்ற மிருகம் மணிக்கு 50 மைல் ஓடும்.

அநேக பாம்புகள் தரையில் வெகு வேகமாய் ஓடும். கால்கள் இல்லையென்பதால் அவைகள் வேகமாய் ஓடாது என்று நினைக்கக்கூடாது. நாகபாம்பு மாத்திரம் மணிக்கு 30 மைல் ஓடும். மனிதனாவது குதிரையாவது ஓடினால், வெகு சீக்கிரத்தில் ஒரு நாகம் பிடித்துவிடும்.

பறவையின் வேகத்திற்கு காரணம் என்ன ?

மனிதன் வேகம் மாத்திரம் மிகக்குறைந்ததாயிருக்க, பறவைகளின் வேகம் மிக அதிகமாகயிருப்பானேன் ?

பறவைகளுக்கு தேகம் முழுவதும் அதாவது தலையிலிருந்து வால்வரையிலும் ஒரே நிலையில் இருப்பதாலும், தலையும், வாலும் கூர்மையாய் இருப்பதாலும் அதிகமாகப்பறந்து செல்வதற்கு அநுகூலமாயிருக்கிறது. மனிதன் அவ்வாறில்லை. ஆகையினால் தான் மனிதன் குறைந்த வேகப் பிராணியாய் இருக்கிறான்.

ஆகாய விமானங்கள் பறவைகள் போல் அமைக்கப் பட்டிருப்பதின் காரணம் அதிக வேகமாய்ச் செல்வதற்காகத் தான்.

(க. ஜீ.)

சிறந்தமுறை! குறைந்தவிலை!! நிறைந்தகுணம்!!!

வியாபாரிகளுக்கு தக்ககமிஷன் கொடுக்கப்படும்.

மைனா தைலம்

கை, கால், இடுப்பு, வலிகளுக்கும்
நரம்புகள் சுளுக்கு, சதை பொருதல்,
அடி, காயம், தேள்கடி, வாயுப்பிடிப்பு
வாதம், நீர்க்கட்டு முதலியவைகளுக்
கும் சஞ்சீவி போன்றது. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஒரு அவுன்ஸ் புட்டி 1-க்கு
விலை அணா 0—6—0.

6 அணாவுக்கு வி. பி. எடுப்பது
சிரமமானதினால் 9 அணா ஸ்டாம்பு
அனுப்பினால் ஒரு புட்டி அனுப்பப்படும்.

முக்கியமான புஸ்தகங்கள்.

குறைந்த விலை

இராமாயண ஆராய்ச்சி 1 முதல் 4 காண்டங்கள் சேர்த்து தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0

கர்ப்ப ஆட்சி, புத்த ரஹ்யா, புராணங்கள் ஆகிய மூன் றும் ஒன்றாய் தருவிப்பவர்களுக்கு விலை ரூ. 1—0—0

தபால் சார்ஜ் அணா 0—4—0

மானேஜர்.—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு

முக்கிய கவனிப்பு.

"குடி அரசு" (வாரப்பதிப்பு)

"பகுத்தறிவு" (மாதப்பதிப்பு)

அரசியல் புரட்டு,
மத இயல் புரட்டு,
பொருளியல் புரட்டு,
சமுதாய இயல் புரட்டு,
தேசிய இயல் புரட்டு

முதலாகிய பல புரட்டுகளையும், அவற்றைத் தங்கள் சுயநலங்களுக்குப் பயன் படுத்திக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழும் பல "தலைவர்கள்", மதாச்சாரியர்கள், மடாதிபதிகள், சீர்திருத்தக்காரர்கள், தேசபக்தர்கள், அரசாங்கத்தார் என்பவர்களின் யோக்கியதைகளையும் பச்சையாய் வெளியாக்கி மக்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துக்கூறும் புரட்சிப் பத்திரிகைகள் தென்னாட்டில் ஏன்? இந்தியாவிலேயே இவற்றைத்தவிர வேறு கிடையாது என்று சொல்லலாம்.

குடி அரசுக்கு வருட சந்தா ரூ. 3—0—0
பகுத்தறிவுக்கு ,, ரூ. 1—0—0

இரண்டு பத்திரிகைக்கும் சேர்ந்து

வருட சந்தா ரூ. 3—8—0

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0

அறிஞர் சார்லஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0

Hon பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்	I-ம் பாகம்	0 6 0
ஷை	II-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்		0 4 0
ஷை	2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. ராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.)		0 4 0

குடி அரசுபதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) 200பக்கம்	0	5	0
11	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா சீர்திருத்த மகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப் பாடல்	0	2	0
18.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
20.	சோஷியலிசம்	0	2	0
21.	போல்ஷ்விக் முறை	0	1	0
22	ஈ. வெ. ரா இலங்கை உபந்யாசம்	0	0	9
23	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
24.	சமதர்ம உபந்யாசம்	0	0	6
25	சோதிட ஆராய்ச்சி	0	4	0
26.	மனுநீதி விளக்கம்	0	2	0
27.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
28.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
39.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
30	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	8	0
31.	கர்ப்ப ஆட்சி	0	6	0
32.	ராவணப் பெரியார்	0	5	0
33	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
34	நரகம் எங்கே?	0	2	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai vilakam Press, Erode.